அலகு 10

# நவீன உலகம்: பகுத்தறிவின் காலம்

## கற்றலின் நோக்கங்கள்

கீழ்க்கண்டவற்றைப் பற்றி அறிந்துகொள்ளல்

- இத்தாலிய மறுமலர்ச்சி மற்றும் மேற்கத்திய ஐரோப்பாவுக்கு அதன் பரவல்
- புதிய நிலப்பரப்பையும் கடல் வழித்தடங்களையும் கண்டுபிடித்தல்
- வர்த்தகப் புரட்சியும் அதன் தாக்கமும்
- பிராட்டஸ்டன்ட் சீர்திருத்தம் மற்றும் கத்தோலிக்க எதிர் சீர்திருத்தம்
- மேற்கு ஐரோப்பாவில் முடியாட்சிகளின் எழுச்சியும் தேசிய அரசுகளின் தோற்றமும்

A6D2B9

## அறிமுகம்

பதினைந்து மற்றும் பதினாறாம் நூற்றாண்டுகளில் நிகழ்ந்த மூன்று பெரும் நிகழ்வுகளாக மறுமலர்ச்சி, புவியியல் கண்டுபிடிப்புகள், சீர்திருத்த இயக்கங்களின் தோற்றம் ஆகிய மூன்று முக்கிய நிகழ்வுகளைக் குறிப்பிடலாம். இவை இடைக்காலம் தொடங்கி நவீனகாலம் வரையிலான மாற்றங்களைக் குறிக்கும் விதமாக அமைந்தன. மறுமலர்ச்சியின் சாரம் மனிதர்களுக்கும் இயற்கைக்கும் முக்கியமாக அமைந்த சமயம் இரண்டாம் இடத்துக்கு தள்ளப்பட்டதே எனலாம். மறுமலர்ச்சி நவீன உலகை உருவாக்குவதில் மிக முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியது. ஐரோப்பாவின் புவியியல் சார்ந்த கற்பனைகளுக்கு அது ஊக்கமாக அமைந்தது. கொலம்பஸ் பெற்ற வெற்றியானது வெளிநாட்டு அமைப்புக்களுக்கு பெரிதும் ஊக்கமளிப்பதாக அமைந்தது. கத்தோலிக்க தேவாலயங்களுக்கு எதிரான கிளர்ச்சியாக உருவான சீர்திருத்தங்கள் சமய வரைபடத்தில் மாற்றங்களை உருவாக்கியதோடு சமயம் தொடர்பான அணுகுமுறைகளில் ஒரு பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தியது. முடியாட்சியை ஒருங்கிணைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மற்றும் அதனை உறுதியாக்கும் நடவடிக்கைகளின் விளைவாக ஸ்பெயின், பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளில் தேசிய அரசுகள் உருவாக வழியமைத்தன.

## 10.1 இத்தாலியில் ஏற்பட்ட மறுமலர்ச்சியும் மேற்கு ஐரோப்பியாவில் அதன் பரவலும்

### மறுமலர்ச்சியின் முக்கியத்துவம்

லத்தீன் மூலத்தில் இருந்து உருவான மறுமலர்ச்சி (Renaissance) என்ற வார்த்தையின் பொருள் மறுபிறப்பு அல்லது புத்துயிர்ப்பு என்பதாகும். இது கிரேக்க மற்றும் ரோமானிய பகுதிகளில் செம்மொழிகளைக் கற்றல் தொடர்பாக திடீரென எழுந்த ஆர்வத்தை குறிப்பதாக அமைகிறது. எனினும் இந்த வளர்ச்சியின் போக்கில் மறுமலர்ச்சி என்பது பண்டைய கிரேக்க மற்றும் ரோமானிய செவ்வியல் இலக்கியங்களைக் கற்றல் என்பது மட்டுமல்லாமல் அதனை புத்துயிர்ப்பு பெறச்செய்வதாகவும் இருந்தது. அது கலை, இலக்கியம், அறிவியல், தத்துவம், கல்வி, சமயம் மற்றும் அரசியல் ஆகிய துறைகளில் புதிய சாதனைகளை உள்ளடக்கியதாக அமைந்தது. மறுமலர்ச்சி பல்வேறு கொள்கைகளை உள்ளடக்கியதாக இருந்தது. மனிதநேயம், ஐயுறவுவாதம், தனித்துவம் மற்றும் சமயச்சார்பின்மை ஆகியன அவற்றில் குறிப்பிடத்தக்கவையாக இருந்தன. சமயத்துறவிகள் மற்றும் பிரபுக்களின் பங்களிப்பாக இல்லாமல் சாதாரண மனிதர்களின் பங்களிப்பாக மறுமலர்ச்சி இருந்தது அதன் சிறப்பம்சமாகும்.



12th_History_TM_Unit_10_V2.indd 19 24-09-2019 09:53:31

## மறுமலர்ச்சிக்கான காரணங்கள்

(i) சிலுவைப் போர்களின்போது (முஸ்லிம் ஆட்சியில் இருந்து புனித நிலத்தை மீட்பதை குறிக்கோளாகக் கொண்ட சமயப்போர்கள்) ஏற்பட்ட புதிய அனுபவங்கள் வாயிலாக வெனிஸ், பிளாரன்ஸ், ஜெனோவா, லிஸ்பன், பாரிஸ், இலண்டன், ஆன்ட்வெர்ப், ஹாம்பர்க் மற்றும் நூரெம்பர்க் ஆகிய சுதந்திரமான, வர்த்தக நகரங்கள் உருவானதும் அங்கே பல பயணிகள் வந்து சென்றதும் பிரான்ஸின் பாரிஸிலும், இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டிலும் இத்தாலியின் போலோக்னோவிலும் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டதும் மறுமலர்ச்சியின் பிறப்புக்குத் தேவையான தொடக்க நிலைமைகளை உருவாக்கின.

(ii) தத்துவார்த்த விவாதங்கள் பதினோறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தொடங்கி, பல அறிவார்ந்த மக்களை உருவாக்கியது. பதின்மூன்றாம் நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க அறிவார்ந்த நபர்களில் முதன்மையானவர் ரோஜர் பேக்கன் (1214–1294) என்பவர் ஆவார். ஆக்ஸ்ஃபோர்டில் வசித்த ஆங்கிலப் பேராசிரியரான ரோஜர் பேக்கன் 'நவீன நடைமுறைச் சோதனை அறிவியலின் தந்தை' என அழைக்கப்படுபவர். அவர் மனிதகுலமானது சமயமரபு மற்றும் அதிகாரத்தினால் ஆட்சி செய்யப்படாமல் காரண காரியங்களால் ஆட்சி செய்யப்படவேண்டும் என்று விரும்பினார்.


ரோஜர் பேக்கன்

(iii) துருக்கியர்களுக்கு எதிரான போரில் மேற்கத்திய நாடுகளின் உதவியை நாடி பைசாண்டியப் பேரரசரிடம் இருந்து ஒரு கோரிக்கையுடன் 1393ஆம் ஆண்டில் கான்ஸ்டான்டிநோபிளைச் சேர்ந்த பிரபல அறிஞர் மானுவேல் கிரைசாலோரஸ் வெனிஸ் நகரத்துக்கு சென்று சேர்ந்தார். பிளாரன்ஸ் பல்கலைக்கழகத்தில் கிரேக்க இலக்கியத்தை பயிற்றுவிக்கும் பேராசிரியராக சேருமாறு கிரைசாலோரசுக்கு பணிவாய்ப்பு வழங்கப்பட்டது. பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பைசாண்டியத்தைச் சேர்ந்த இதர அறிஞர்களும் இத்தாலிக்கு குடிபெயர்ந்தனர். இந்த அறிஞர்களால் ஈர்க்கப்பட்ட இத்தாலிய அறிஞர்கள் பைசாண்டியத்தைச் சேர்ந்த கான்ஸ்டான்டிநோபிள் மற்றும் இதர நகரங்களுக்கு கையெழுத்துப்பிரதிகளைத் தேடி பயணம் மேற்கொண்டனர். 1413க்கும் 1423க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் ஜியோவனி அவுரிஸ்பா என்ற அறிஞர் மட்டும், சோபோகில்ஸ், யூரிபைட்ஸ், தூசிடைட்ஸ் ஆகியோரின் படைப்புகள் உள்பட 250 கையெழுத்துப்பிரதி நூல்களை இத்தாலிக்கு கொண்டு வந்தார். 1453ஆம் ஆண்டு கான்ஸ்டான்டிநோபிளின் வீழ்ச்சிக்குப் பிறகு அங்கிருந்து வெளியேறிய செவ்வியல் அறிஞர்கள் மேற்கத்திய ஐரோப்பாவிற்கு சென்றதால் செவ்வியல் படைப்புகளை கற்கும் நடவடிக்கைகள் ஊக்கம் பெற்றன.

(iv) கிறித்தவ உலகத்துக்கு பைசாண்டிய உலகம் அறிஞர்களையும் தத்துவஞானிகளையும் மட்டும் கொடுக்கவில்லை, காகிதத்தையும் அது கொடுத்தது. உண்மையில் கி.மு. (பொ.ஆ.மு.) இரண்டாம் நூற்றாண்டில் சீனாவில் காகிதம் தோன்றியிருந்தாலும், ஜெர்மனிக்கு காகிதம் பதினான்காம் நூற்றாண்டில்தான் அறிமுகமானது. அதன்பிறகுதான் ஜோஹன்னஸ் குட்டன்பெர்க் என்பவரால் நகரும் தட்டச்சு மற்றும் அச்சகங்கள் கண்டுபிடிக்கப்பட்டது. அச்சுப்பணிக்குப் பிறகே உலகின் அறிவுசார்ந்த வாழ்க்கை மேலும் உத்வேகம் பெற்று அறிவு விரைவாகப் பரவியது.

## மறுமலர்ச்சியின் தாயகமாக இத்தாலி

இத்தாலிய நகரங்களில் தொடங்கிய மறுமலர்ச்சி மேற்கத்திய ஐரோப்பாவின் இதர நகரங்களுக்கு பின்னர் பரவியது. இத்தாலியர்கள் தாங்கள் ரோமானிய மூதாதையர்களின் வழித்தோன்றல்கள் என்ற நம்பிக்கையைப் பாதுகாத்து வந்தனர். தங்கள் பாரம்பரியம் குறித்து அவர்கள் பெருமை கொண்டார்கள். லத்தீன் கிறித்தவ உலகத்தின் இதர பகுதிகளைக் காட்டிலும் இத்தாலியில் பெருமளவுக்கு சமயச்சார்பின்மை கலாச்சாரம் நடைமுறையில் இருந்தது. பழைய தேவாலயங்கள் மற்றும் ஓவியங்கள் இருண்டதாகவும் பழைய பாரம்பரியங்கள் தொல்லை தருவதாகவும் அவர்களுக்கு விளங்கின. தங்களுக்குப் பிடித்தமானவற்றைத் தேடும் முயற்சியில் அவர்கள் லத்தீன் மொழியில் எழுதப்பட்ட புத்தகங்களைக் கண்டுபிடித்தனர். லத்தீன் மொழியை ரோமானிய மூதாதையர்கள் எழுதியது போன்று அவர்கள் எழுதக் கற்றுக்கொண்டனர். மேலும் கிரேக்க மொழியையும் கற்ற அவர்கள் ஏதென்ஸ் நகர மக்களின் அருமையான, பெரிகிளிஸ் காலத்து படைப்புகளையும், கிரேக்க மற்றும் ரோமானிய கலாச்சாரங்களின் கடந்த காலப் படைப்புகளையும் கண்டுபிடித்தனர். சட்டம் மற்றும் தத்துவயியல் படிப்புகளுக்காகவே முதன்மையாக இத்தாலிய பல்கலைக்கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன.


12th_History_TM_Unit_10_V2.indd 20 24-09-2019 09:53:31

**மெடிசி குடும்பம்:** இத்தாலிய நகரங்களில் ஒன்றான பிளாரன்ஸ் சக்திவாய்ந்த வர்த்தகக் குடும்பமான மெடிசி குடும்பம் மூலமாக ஆளுமை செய்யப்பட்ட காசிமோ டி மெடிசி என்பவர் இத்தாலி முழுவதும் வங்கிக்கிளைகளை நடத்தி வங்கித்துறையில் கொடிகட்டிப்பறந்ததோடு 1434 முதல் 1464ஆம் ஆண்டு வரை அரசு நிர்வாகத்தை மறைமுகமாக தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். அவரது மறைவுக்குப் பிறகு அவரது பெயரன் லாரன்சோ அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அரசைக் கட்டுப்படுத்தினார். லாரென்சோ அனைவராலும் "லாரென்சோ அற்புதமான மனிதர்" என்று அழைக்கப்பட்டார். இந்த காலகட்டத்தில் மைக்கேல் ஆஞ்சிலோ , லியானர்டோ டாவின்சி உள்ளிட்ட பல ஓவியக் கலைஞர்களுக்கு மெடிசி குடும்பம் ஆதரவு அளித்தது.

இத்தாலி மத்தியதரைக்கடல் பகுதியின் மையத்தில் அமைந்திருந்ததால் கிழக்கத்திய நாடுகளுடனான வர்த்தகத்தை புத்துயிர் பெறச் செய்ததில் இத்தாலிய நகரங்கள் பெரும்பயன் பெற்றன. பதினான்காம் நூற்றாண்டில் கடல்வழி வாணிகத்தில் ஈடுபட்ட இத்தாலிய நகரங்கள் அதிக செல்வம் ஈட்டின. பிளாரன்ஸில் மெடிசி குடும்பமும் மிலானில் ஸ்ஃபோர்ஸா குடும்பமும் மறுமலர்ச்சி காலத்தில் செல்வந்த குடும்பங்களாக உருவாகின.

இத்தாலிய மறுமலர்ச்சி காலத்தில் மிகச்சிறந்த ஓவியக்கலைஞர்களை ஆதரித்த பெருமை ஐந்தாம் நிக்கோலஸ், இரண்டாம் பயஸ், இரண்டாம் ஜூலியஸ் மற்றும் பத்தாம் லியோ ஆகிய போப்பாண்டவர்களையே சாரும்.

## மறுமலர்ச்சியின் தாயகமாக பிளாரன்ஸ்

### இலக்கியத்தில் மறுமலர்ச்சி

பதின்மூன்று மற்றும் பதினான்காம் நூற்றாண்டுகளிலேயே தாந்தே (1265–1321), பெட்ரார்க் என்ற இரண்டு பெரும் இத்தாலிய மொழி கவிஞர்களை பிளாரன்ஸ் உருவாக்கியிருந்தது. இடைக்கால கலாச்சாரத்தின் சுருக்கமாக தாந்தேயின் தெய்வீக இன்பியல் (Divine Comedy) திகழ்கிறது. காரணங்கள் மற்றும் இறை அருள் மூலமாக மனித குலம் இரட்சிப்பு பெறமுடியும் என்பது அதன் மேலான கருப்பொருளாகும். மனிதர்களின் அன்பு, நாட்டுப்பற்று, இயற்கை மீதான ஆர்வம் மேலும் சுதந்திரமான ஒன்றுபட்ட இத்தாலி நாடு என பல கருப்பொருட்களையும் அது உள்ளடக்கியிருந்தது.


தாந்தே


பெட்ரார்க்

பெட்ரார்க் (1304–1374) லத்தீன் மற்றும் இத்தாலிய மொழிகள் இரண்டிலும் படைப்புகளை உருவாக்கினார். மனிதநேயவாதிகளுள் முன்னோடியான இவர் 'இத்தாலிய மறுமலர்ச்சி இலக்கியத்தின் தந்தை' என்று கருதப்படுகிறார். பெட்ரார்க்கின் ஆராயும் மனமும் செவ்வியல் (கிரேக்க மற்றும் லத்தீன் மொழி) நூலாசிரியர்கள் மீதான ஈர்ப்பும், அவரை பயணிக்க வைத்தன. அவர் கிரேக்க மற்றும் ரோமானிய கையெழுத்துப்பிரதிகளைத் தேடி, சமயத்துறவிகள் நடத்திய நூலகங்களுக்கு சென்றார். சிசரோவின் கடிதங்களை அவர் மறுபடியும் கண்டுபிடித்தது பதினான்காம் நூற்றாண்டின் இத்தாலிய மறுமலர்ச்சியில் முக்கிய தருணமாக கருதப்படுகிறது.

பிளாரன்ஸ் நகரை சேர்ந்தவரான ஜியோவனி பொக்காசியோ (1313–1375), பிளேக் என்ற கருங்கொள்ளை நோயிலிருந்து தப்பிக்கும் பொருட்டு, பிளாரன்ஸ் நகருக்கு வெளியே ஒரு குடியிருப்பில், ஏழு இளம்பெண்களும் மூன்று இளைஞர்களும் தங்கியிருந்தபோது கூறியதாக எழுதப்பட்ட 100 கதைகளின் தொகுப்பை டெக்கமரான் என்ற தலைப்பில் புத்தகமாக வெளியிட்டார்.


பொக்காசியோ

### நிக்கோலோ மாக்கியவல்லி (1469–1527)

நிக்கோலோ மாக்கியவல்லியின் 'தி பிரின்ஸ்' என்ற படைப்பு ஆட்சியாளர்களுக்கு அரசியல் வழிகாட்டியாக அமைந்தது. தாம் ஆளும் நாட்டின் அதிகாரம் மற்றும் பாதுகாப்பை பராமரிப்பது ஒரு ஆட்சியாளரின் தலையாய கடமை என்று அவர் கருத்துகொண்டிருந்தார். நீதி அல்லது கருணை அல்லது ஒப்பந்தங்களை பின்பற்றுவது ஆகியன இவரின் தலையாய கடமைக்கு குறுக்கே வரக்கூடாது. ஒவ்வொரு மனிதரும் சுயநலம் சார்ந்த நோக்கங்களைக் கொண்டிருப்பது


12th_History_TM_Unit_10_V2.indd 21 24-09-2019 09:53:31

இயல்பு மற்றும் நாட்டின் ஆட்சியாளர் குடிமக்களின் விசுவாசமும் பாசமும் எப்போதும் இருக்கும் என்று கருதிவிடக்கூடாது என்பதிலும் மாக்கியவல்லி உறுதியாக இருந்தார்.



மாக்கியவல்லி

'தி பிரின்ஸ்' என்ற நூலில் ஒரே நேரத்தில் மனிதனாக, மிருகமாக, சிங்கமாக, நரியாக மாறத் தெரிந்திருக்கவேண்டும் என்று மாக்கியவல்லி கூறுகிறார். 'எப்போது தமது செயல்பாடு தமக்கு எதிராக மாறக்கூடும் என்று தெரியாததால் தமது வாக்கை ஒருவர் காப்பாற்றமுடியாது; அதனால் சொல்லவும் கூடாது. எப்போதும் நேர்மையாக இருப்பது என்பது மிகவும் அனுகூலமற்றது; ஆனால் பக்திமானாக, உண்மையாக மனிதநேயத்துடன் பக்தியுடனும் இருப்பது போல் தோற்றமளிப்பது பலனளிக்கும், நல்லொழுக்க குணம் இருப்பது மிகவும் பலனளிக்கும்' என்று அவர் கூறுகிறார்.

## கலையில் மறுமலர்ச்சி


### லியானர்டோ டாவின்சி (1452–1519)

பிளாரன்ஸில் தாம் தீட்டிய அனைத்து ஓவியங்கள் பற்றியும் அவை எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன என்பது பற்றிய புரிதலையும் அறிய விரும்பிய ஒரு ஓவியர் இருந்தார். அவர் தான் பண்ணையில் வேலை பார்த்த ஒரு பணிப்பெண்ணின் மகனான லியானர்டோ டாவின்சி ஆவார். எனவே லத்தீன் மற்றும் கணிதத்தை அவர் சுயமாக கற்றுத் தேர்ந்தார். அவர் ஒரு சிற்பி, பெரிய சிந்தனையாளர் மற்றும் விஞ்ஞானி. கல்லறைகளில் இருந்து சடலங்களை எடுத்து அறுத்துப்பார்த்து மனித உடற்கூறுகளை பற்றி அறிந்து அவற்றை தமது ஓவியங்களில் சரியாக எடுத்துரைக்க முனைந்தார். மனித உடலில் இரத்த ஓட்டம் குறித்து முதன்முதலில் கண்டுபிடித்தவர் அவர். பலதரப்பட்ட திறமைகளைக் கொண்ட டாவின்சி 'மறுமலர்ச்சிகால மனிதர்' என்று அழைக்கப்பட அனைத்துத் தகுதிகளையும் கொண்டு திகழ்ந்தார்.




லியானர்டோ டாவின்சி

வர்ஜின் ஆஃப் தி ராக்ஸ், இறுதி விருந்து (Last Supper), மோனலிசா ஆகியன டாவின்சியின் மிகச் சிறப்பான படைப்புகளில் ஒன்றாகும்.



இறுதி விருந்து

வர்ஜின் ஆஃப் தி ராக்ஸ் என்ற ஓவியப்படைப்பில் கன்னி மேரி இருட்டில் இருந்து வெளியே வருவார், இளையவரான ஜானை பிராட்டஸ்டன்ட் கிறித்தவக் குழந்தையாகக் கொண்டிருப்பார். மிலானில் உள்ள டொமினிகன் துறவிகள் மடத்துக்காக இயேசு சிலுவையில் அறையப்படும் முன் அவரது சீடர்களுடன் உண்ட இறுதி விருந்தை (Last Supper) அவர் ஓவியமாகத் தீட்டினார். புகழ்பெற்ற மோனலிசா ஓவியம் பிளாரன்ஸைச் சேர்ந்த செல்வந்த வணிகரான பிரான்ஸிஸ்கோ டெல் ஜியோகோன்டோவின் மனைவி லிசா கெரார்டினியின் உருவமாக கருதப்படுகிறது. ஜியோகோன்டோ இதனை வெளியிட்டார்.



மோனலிசா

### மைக்கேல் ஆஞ்சிலோ (1475–1564)

1460களில் பைபிளின் நாயகரான டேவிட்டின் உண்மையான தோற்றத்தை வெளிப்படுத்தும் சிறப்பான ஓவியத்தை முதன்முதலில் வரைந்த ஓவியர்களில் டொனடெல்லோவும் ஒருவராவார். மறுமலர்ச்சி காலத்தின் மிகப்பெரிய சிற்பியான மைக்கேல் ஆஞ்சிலோ டி லொடோவிகோ ப்யூனரோட்டி சைமோனியை அவரின் ஆளுமை பெரும்தாக்கத்தை ஏற்படுத்தியது. போப்புகளால் கட்டப்பட்ட ரோமில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் தேவாலயம் மைக்கேல் ஆஞ்சிலோவால் நவீனமயமானது. இந்த செயின்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தில் உள்ள குவிமாடம், டேவிட்டின் உண்மைத் தோற்றத்தை வெளிப்படுத்தும் சிலை, சிஸ்டைன் தேவாலயம்



மைக்கேல் ஆஞ்சிலோ



12th_History_TM_Unit_10_V2.indd 22 24-09-2019 09:53:32

(சிறிய பிரார்த்தனை அரங்கு) சுவர்களில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் ஆகியன மறுமலர்ச்சி கால ஓவியத்தின் மிகச் சிறப்பான உதாரணங்கள். புகழ்பெற்ற பியட்டா என்ற கன்னி மரியாளின் சிலையையும் அவர் வடித்துள்ளார். கிறிஸ்து உயிரிழந்ததை அடுத்து கன்னி மரியாள் அவரது உடலுக்கு அருகே சோகமே வடிவாக இந்த சிலை வடிக்கப்பட்டிருக்கும். மத்திய இத்தாலியின் கெர்ரெராவில் இருந்து கொண்டுவரப்பட்ட ஒரே பளிங்குக்கல்லில் இந்த சிலை வடிக்கப்பட்டது.

**ரபேல் (1483–1520)**

ரபேலின் மிகச்சிறந்த படைப்பான மடோனாவும் குழந்தையும் என்ற பெயரிடப்பட்ட ஓவியமானது கன்னி மரியாளும் குழந்தை இயேசுவும் இருப்பதை சித்தரிப்பதாக உள்ளது. போப் இரண்டாவது ஜூலியஸின் நூலகச் சுவர்களில் பல சமயக் கருப்பொருள்களில் ரபேல் அவர்கள் வரைந்த ஓவியங்கள் அலங்கரித்தன. மறுமலர்ச்சி கால கலையின் சிறப்பை வெளிப்படுத்தும் வகையில் ஏதென்ஸ் பள்ளி குறித்த கருப்பொருள் அவற்றில் ஒன்றாகும். லியானர்டோ மற்றும் மைக்கேல் ஆஞ்சிலோ ஆகியோரின் ஓவியங்களுடன் அவர் தனது ஓவியங்களை வரைந்தார்.


ரபேல்


## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து பதினேழாம் நூற்றாண்டு வரையிலான காலத்தின் போது அறிவியல் அதிவேக வளர்ச்சி பெற்று அறிவியல் புரட்சிக்கு வித்திட்டது. தேவாலய நிர்வாகம் கடவுளைக் கேள்விகேட்பது, சிந்திப்பது மற்றும் நடைமுறைச் சோதனைகளில் மக்கள் ஈடுபடுவதை விரும்பாததால் விஞ்ஞானிகள் தேவாலய நிர்வாகத்தை எதிர்த்துக்கொள்ள வேண்டியிருந்தது.

போலந்து நாட்டு விஞ்ஞானியான நிக்கோலஸ் கோபர்நிகஸ் (1473–1543), சூரியக் குடும்பத்தில் சூரியன் மையத்தில் உள்ளது; பூமியும் இதரக் கோள்களும் சூரியனை சுற்றிவருகின்றன என்ற சூரியமையக் கோட்பாட்டை (heliocentric) கண்டறிந்து வெளியிட்டார். இந்தக் கொள்கைக்கு மாறாக பூமியை மையமாகக் (geocentric) கொண்டு கோள்கள் செயல்பட்டதாக தேவாலய நிர்வாகம் கருத்துகொண்டிருந்தது. தேவாலயக் கருத்துக்கு எதிரான அனைத்தும் கிறித்தவக் கோட்பாடுகளுக்கு எதிரானதாகக் கருதப்பட்டன. தனது வாழ்நாளின் இறுதி வரை வான்வெளி வட்டங்களின் புரட்சி குறித்த ஆய்வுகளை வெளியிடுவதைத் தள்ளிப்போட்டுக் கொண்டே இருந்தார். பூமி சூரியனைச் சுற்றி வருவதாக வலியுறுத்திய ஜியார்டனோ புரூனோ என்ற இத்தாலியர் 1600இல் ரோமில், தேவாலய நிர்வாகத்தால் எரிக்கப்பட்டார்.


நிக்கோலஸ் கோபர்நிகஸ்

சூரியனை மையமாகக்கொண்டு கோள்கள் சுற்றும் சூரியமையக் கோட்பாட்டுக்கு மிக முக்கியமான வானியல் ஆதாரத்தை பிரபல வானியல் நிபுணர் கலிலியோ கலிலி (1564–1642) வெளியிட்டார். ஒரு தொலைநோக்கி கொண்டு வியாழன் கிரகத்தின் செயற்கைக்கோள்கள், சனிகிரகத்தின் சுற்றுவட்டங்கள், சூரியனின் புள்ளிகள் ஆகியவற்றை அவர் கண்டுபிடித்தார். பட்வா பல்கலைக்கழகத்தில் (வெனிஸ் குடியரசுப் பல்கலைக்கழகத்தில்) மருத்துவம் மற்றும் கணிதத்துக்கான பேராசிரியராக மெடிசி குடும்பத்தால் நியமிக்கப்பட்டார். அறிவியலை சமயத்தில் இருந்து பிரித்து வைக்கும் முயற்சிகளை அவர் மேற்கொண்டார். சூரியமையக் கோட்பாட்டின்படி, சூரியனை மையமாகக் கொண்டு கோள்கள் இயங்கும் கொள்கையை வெளியிட்ட கோபர்நிகஸின் கருத்துகளை அவர் ஏற்றார். தேவாலய நிர்வாகத்துக்கு எதிரான கருத்துகளைக் கூறியதாக வழக்கு தொடரப்பட்டு அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.


கலிலியோ கலிலி

பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த அறிவியல் அறிஞர்களில் முக்கியமான மனிதராக வில்லியம் ஹார்வி (1578–1657) திகழ்ந்தார். அவர் மனித உடலில் இரத்த ஓட்டம் குறித்து இறுதியில் நிரூபித்தார்.


வில்லியம் ஹார்வி



12th_History_TM_Unit_10_V2.indd 23 24-09-2019 09:53:34

### மேற்கு ஐரோப்பாவில் மறுமலர்ச்சியின் பரவல்

**இங்கிலாந்தில் மறுமலர்ச்சி**

இத்தாலியில் மட்டுமல்லாமல் பிரான்ஸ், ஜெர்மனி உட்பட ஐரோப்பாவின் பெரும்பாலான பகுதிகளில் மறுமலர்ச்சி தனது தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இங்கிலாந்தில் அது ஆழமான அடையாளத்தை ஏற்படுத்தியது. முதலாம் எலிசபெத் (1558–1603) அவர்களின் ஆட்சி 'எலிசபெத் காலம்' என்று அழைக்கப்பட்டது. ஆங்கில மறுமலர்ச்சியில் எலிசபெத் காலம் பல அறிஞர்களை உருவாக்கியது. வில்லியம் ஷேக்ஸ்பியர், கிறிஸ்டோபர் மர்லோவ், பிரான்ஸிஸ் பேக்கன் ஆகியோர் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். ஆங்கில நாடக ஆசிரியரான கிறிஸ்டோபர் மார்லோவ், டிடோ, தி குயீன் ஆஃப் கார்தேஜ், டம்பர்லெய்ன் தி கிரேட் ஆகிய முக்கிய படைப்புகளை உருவாக்கியுள்ளார்.



முதலாம் எலிசபெத்

ஆங்கில இலக்கியத்தின் முடிசூடா மன்னர் வில்லியம் ஷேக்ஸ்பியர் ஸ்டிராட்போர்டு அபான் ஏவன் என்ற நகரத்தில் பிறந்த அவர் 38 நாடகங்களையும், அன்பு, கோபம், சோகமான நிகழ்வு, பொறாமை மற்றும் ஏமாற்றுதல் ஆகிய மனிதர்களின் பல்வேறு உணர்வுகள் குறித்த பல கவிதைகளையும் எழுதியுள்ளார். ஏஸ் யூ லைக் இட், தி டேமிங் ஆஃப் தி ஷ்ரூ மற்றும் மிட் சம்மர் நைட்'ஸ் டிரீம் ஆகியன அவரது நகைச்சுவை நாடகங்களாகும். ஒத்தெல்லோ, ஹாம்லெட், கிங் லியர், ரோமியோவும் ஜூலியட்டும் ஆகியன சோகமயமான நாடகங்களுக்கு உதாரணங்களாகும். லண்டனில் குளோப் அரங்கில் அரங்கேற்றப்பட்ட அவரது நாடகங்கள் பிரசித்தி பெற்றவையாகும். ஆங்கில மொழியின் மிகப்பெரிய தாக்கம் பெற்ற அவரது நாடகங்கள் தொழிற்புரட்சிக்குப் பிறகு பிரிட்டன் ஒரு அரசாங்கமாக உருவெடுத்த நிலையில் உலகம் முழுவதிலும் பரவின.

பிரான்ஸிஸ் பேக்கன் அவர்கள் 'அனுபவவாதத்தின் தந்தை' என்று கருதப்படுகிறார். தூண்டல் பகுத்தறிவு என்பதே (கொணர்முறை பகுத்தறிவுக்கு எதிர்ப்பதமாக, குறிப்பிட்ட விவரங்கள் அடிப்படையிலான பொதுக்கருத்து உருவாக்கம் மூலமான தர்க்க சிந்தனை வழியான அணுகுமுறை) விஞ்ஞான அறிவின் அடிப்படை என்று அவர் வாதிட்டார். லத்தீன் மொழியில் அவரால் எழுதப்பட்ட நோவும் ஆர்கனும் முக்கிய தத்துவப்படைப்பாக விளங்குகிறது. இயற்கையான கொள்கைகளை விவரித்து கற்கும் வழிமுறைகளை முறையான கவனிப்பில் நேரில் ஆய்வது பற்றி இந்த படைப்பு விளக்குகிறது.

## 10.2 கிழக்குப் பகுதிகளுக்கான புதிய கடல்வழித்தடங்களை கண்டுபிடித்தல்

துருக்கிய வெற்றிகளும் கான்ஸ்டான்டிநோபிளின் வீழ்ச்சியும் ஐரோப்பிய கடல்சார் கண்டுபிடிப்பு நாடுகளை கிழக்கத்திய நாடுகளுக்கு புதிய கடல்வழிகளைக் கண்டுபிடிக்க உத்வேகத்தையளித்தது. எனவே, அந்நாடுகள் உதுமானியர்களால் (ஆட்டோமன்கள்) கட்டுப்படுத்தப்பட்ட பழைய கடல் வழித்தடங்களைச் சார்ந்திருக்க விரும்பவில்லை. இந்த முயற்சிகள் மூலம் புதிய புவியியல் கண்டுபிடிப்புகளையும் அட்லாண்டிக் பெருங்கடலுக்கு அப்பால் புதிய உலகம் இருப்பதற்கான சாத்தியக்கூறுகளையும் ஐரோப்பியர்கள் அறியவந்தனர்.

D5I9H8

### கடல் ஆய்வுக்கு வழிவகுக்கும் பல காரணிகள்

(அ) சிலுவைப்போர்களின் போது போர்வீரர்கள் கிழக்கத்திய நாடுகளிலிருந்து பெரும் அளவில் பொருட்களை எடுத்துவந்தனர். மேற்கத்திய நாடுகளில் உணவைப் பதப்படுத்த உதவும் நறுமணப் பொருட்களை கிழக்கத்திய நாடுகளில் இருந்து எடுத்துச் செல்ல ஐரோப்பியர்கள் விரும்பினார்கள். அதுவரைக்கும் இந்தியா மற்றும் மற்ற கீழை நாடுகள் உள்ளிட்ட ஆசிய நாடுகளுடனான கடல்வழி வாணிபத்தை அராபியர்கள் அதுவரை கட்டுப்படுத்தி வந்தனர். ஆசியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இத்தாலியர்களுடன் பொருட்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டது. அந்தப் பொருட்களை வாங்கிய இத்தாலியர்கள் அவற்றை ஐரோப்பாவில் வர்த்தகம் செய்தனர். குறிப்பாக போர்த்துகல், ஸ்பெயின் ஆகிய ஐரோப்பிய நாடுகள் ஆசிய நாடுகளுடன் நேரடியாக வர்த்தகம் செய்ய விரும்பின. அதிக லாபம் கிடைக்கும் என்பதால் அவை புதிய கடல்வழித்தடங்களைக் கண்டுபிடிப்பதற்கு ஊக்கம் தந்தன. இந்த முடிவான பொருளாதாரக் காரணம் தான் புதிய வர்த்தக வழித்தடங்களை கண்டுபிடிப்பதற்கான உத்வேகத்தைக் கொடுத்தது.

(ஆ) கிழக்கத்திய நாடுகளில் இருந்து பொருட்களுக்கான தேவை அதிகரித்ததை



12th_History_TM_Unit_10_V2.indd 24 24-09-2019 09:53:34

அடுத்து ஐரோப்பிய நாடுகள் அதிக லாபம் ஈட்டவும் கடல்வழி வர்த்தகத்தை கட்டுப்படுத்தவும் விரும்பின. எனவே அவர்கள் கடல் வழி ஆய்வில் முதலீடுகளைச் செய்ய விருப்பம் காட்டினர்.

(இ) 'முட்டாள்கள் தேர்தலில் போட்டியிடட்டும் சாதித்துக்காட்ட விரும்புபவர்கள் புது இடங்களுக்குச் சென்று ஆராயட்டும்' என்ற அந்தக் காலகட்டத்தின் சிந்தனைக்கு ஏற்ப பணமும் புகழும் கிடைக்க வாய்ப்பாக இருந்த சாதனை முயற்சிக்கு பலர் தூண்டப்பட்டனர்.

(ஈ) சமயத்தை (கிறித்தவ) பரப்பவேண்டும் என்ற ஆர்வம் புதிய நிலப்பரப்புகளை கண்டுபிடிக்க ஊக்கம் தந்தது. ஆரம்பநாட்களில் இது முதன்மைக் காரணமாக இருக்கவில்லை. அந்தக் காலத்தில் சீர்திருத்த இயக்கங்களின் கருத்துகளுடன் கடவுளைப் பற்றிய வார்த்தை பரவி முக்கியத்துவம் பெற்றது.

(உ) மறுமலர்ச்சியை அடுத்து தொழில்நுட்ப மேம்பாடு பல துறைகளில் ஏற்பட்டது. அதில் ஒன்றாக வரைபடங்களை (Map) உருவாக்கும் கார்ட்டோகிராபி என்ற துறையிலும் வளர்ச்சி ஏற்பட்டது. தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி (கிறித்து சகாப்தத்தில்) முதல் நூற்றாண்டில் டாலமியின் (Ptolemy) வரைபடம் மீண்டும் வரையப்பட்டது. மறுமலர்ச்சி கால புவியியல் வல்லுநர் ஜெரார்டஸ் மெர்கேட்டர் அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை பயன்படுத்தி வரைபடங்களை மாலுமிகள் பயன்படுத்த உருவாக்கினார்.

(ஊ) நீண்டதூர ஆபத்தான கடல் பயணங்களுக்கு புதிய மேம்படுத்தப்பட்ட கப்பல் வடிவமைப்பு பெரிதும் உதவியது. ஆழம் அதிகமில்லாத நீர்ப்பகுதியில் செல்லக்கூடிய இலகுரக காரவெல் கப்பல் கட்டமைப்பும் புதிய தொழில்நுட்ப கண்டுபிடிப்பாகும்.

(எ) துப்பாக்கிகள் மற்றும் இதர ஆயுதங்களைப் பயன்படுத்தியதனால் கடல்பயண ஆபத்துகள் குறைக்கப்பட்டன.

(ஏ) ஐரோப்பாவில் மாலுமிகளுக்கான திசைகாட்டி கருவி (Mariner's Compass) கண்டுபிடிக்கப்பட்டதால் அமைதியான இரவு மற்றும் ஒளிமயமான நட்சத்திரங்களின் உதவியால் மட்டுமே தாங்கள் பயணிக்கும் திசையை அறியவேண்டிய நிலைமையில் இனி மாலுமிகள் இல்லை.



மாலுமிகளின் திசைகாட்டி கருவி

### போர்த்துகலின் முயற்சிகள்



மாலுமி ஹென்றி

ஐரோப்பாவின் தென்மேற்கு பகுதியில் உள்ள போர்த்துகல் நாட்டின் முன்முயற்சிகளால் கானரி, மெடீரா, அசோர் ஆகிய தீவுகளை முதல் ஆய்விலேயே சிறிய நாடான போர்த்துகல் கண்டுபிடித்தது. 1442இல் மாலுமி ஹென்றியால் அனுப்பப்பட்ட மாலுமிகள் ஆப்பிரிக்காவின் கடற்கரைப்பகுதியான கினியாவைச் சென்றடைந்தனர். பின்னர் 1488இல் பார்தோலோமியோ டயஸ் நன்னம்பிக்கை முனையை சுற்றிவந்தார்.

மாலுமி ஹென்றி என்பவர் போர்த்துகீசிய இளவரசர் ஆவார். அவர் கடலுக்குள் செல்லாத நிலையிலும், கடல்பயணம் குறித்த பள்ளி ஒன்றை போர்த்துகல் நாட்டின் சாக்ரெஸில் தொடங்கினார். வரைபடத்தை உருவாக்குபவர்கள், கப்பல் கட்டுவோர் மற்றும் கருவிகள் உருவாக்குவோர் ஆகியோரை வாடகைக்கு நியமித்து திட்டமிட்ட கடற்பயணங்களை மேற்கொள்ள மாலுமிகளுக்கு அவர் உதவினார்.

### கிறிஸ்டோபர் கொலம்பஸ் (1451–1506)



கொலம்பஸ்

ஜெனோவாவைச் சேர்ந்த இத்தாலியரான கிறிஸ்டோபர் கொலம்பஸ் ஸ்பானிய ஆட்சியாளர்கள் பெர்டினான்ட் மற்றும் இசபெல்லாவின் ஆதரவைப் பெறுவதற்கு முன் பல கடினமான சூழ்நிலைகளை கடக்க நேரிட்டது. 1492 ஆகஸ்ட் 3இல் கொலம்பஸ் காடிஸ் அருகே உள்ள பாலோஸ் துறைமுகத்திலிருந்து மூன்று சிறிய கப்பல்கள் (தி சாண்டா மரியா, தி பிண்ட்டா, தி நினா) மூலமாகப் பயணித்தார். 1492ஆம் ஆண்டில் இரண்டு மாதங்கள் மற்றும் ஒன்பது நாட்களுக்கான பயணத்துக்குப் பிறகு இந்தியா என்று அவரால் நம்பப்பட்ட நிலப்பகுதியை அவர் வந்தடைந்தார். ஆனால் உண்மையில் அது அமெரிக்கா எனும் ஒரு புதிய கண்டமாகும். தங்கம்,



12th_History_TM_Unit_10_V2.indd 25 24-09-2019 09:53:34

பருத்தி, விந்தையான மிருகங்கள் மற்றும் கிறித்தவ சமயத்தில் ஞானஸ்தானம் கொடுக்கப்பட வண்ணம் தீட்டப்பட்ட அகலமான கண்களுடன் இரண்டு இந்தியர்களுடன் ஸ்பெயின் சென்றுசேர்ந்தார். தான் கண்டுபிடித்த நிலப்பகுதி இந்தியா என்று அவர் தனது இறுதிக் காலம் வரை நம்பியதால் அவர்கள் இந்தியர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

### வாஸ்கோடகாமா


வாஸ்கோடகாமா

கொலம்பஸ் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து வாஸ்கோடகாமா கிழக்குப் பகுதி நோக்கி தனது வரலாற்றுப் பயணத்தைத் (1497) தொடங்கினார். லிஸ்பனில் இருந்து நான்கு கப்பல்களில் பயணம் மேற்கொண்ட அவர் மொசாம்பிக் தீவை சென்றடைந்தார். பின்னர் அவர் மேலும் தெற்கே பயணம் செய்து கேரளாவின் கோழிக்கோடு அருகே உள்ள கப்பட் (கப்பக்கடவு) என்ற கடற்கரையை அடைந்தார். இந்தியாவின் ஒரு பகுதியை அடைந்த அவர் இந்தியாவுடனான நேரடி வர்த்தக வாய்ப்புகளை திறந்துவிட்டார். இந்தப் பயணம் இந்தியாவின் சில பகுதிகளை காலனி ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர உதவியது. கோவா அவ்வாறான ஒரு பகுதியாகும்.

### போப்பின் ஆணை (1493)

போர்த்துகல் நாட்டவர்கள் கடல் பயணங்களில் ஈடுபடுவது குறித்து ஸ்பெயின் அரசர்கள் அச்சம் கொண்டனர். போப் ஆறாம் அலெக்ஸாண்டர் என்பவரிடம் அவர்கள் இதற்கு ஒரு தீர்வு காணுமாறு கோரினார்கள். 1493ஆம் ஆண்டு, போப் ஒரு ஆணையை வெளியிட்டார். வெர்டி முனை தீவுகளுக்கு மேற்கே 320 மைல்கள் தொலைவில் கண்டம் விட்டு கண்டம் வடக்கு–தெற்கான ஒரு கோட்டினை வரைய இவ்வாணை வகை செய்தது. அந்தப் பிரகடனம் மேற்கில் செய்யப்படும் எந்தவொரு புதிய கண்டுபிடிப்பும் ஸ்பெயினுக்குச் சொந்தம் என்று கூறியது. போர்த்துகல் இந்த திட்டத்தால் மகிழ்ச்சி அடையவில்லை. அடுத்த ஆண்டே (1494) ஸ்பெயினுடன் டார்டெசில்லாஸ் ஒப்பந்தத்தில் அது கையெழுத்திட்டது. பாகுபடுத்தும் வடக்கு–தெற்கு கோடு என்ற கொள்கைத் திட்டத்தை மதித்தாலும் வெர்டி முனை தீவுகளுக்கு மேற்கே 1185 மைல்கள் தொலைவுக்கு தள்ளிப்போட்டது. மேலும் இந்தக் கோட்டுக்கு கிழக்கில் கண்டுபிடிக்கப்படும் அனைத்தும் போர்த்துகல் நாட்டுக்கு சொந்தம் என்று ஏற்றுக்கொண்டது. ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு 1500ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இது போர்த்துகலின் கை ஓங்க வழிவகுத்தது. பெட்ரோ அல்வரெஸ் காப்ரல் பிரேசிலின் கிழக்குக் கடற்கரையோரத்தைச் சென்றடைந்து அதனை போர்த்துகல் நாடு உரிமை கொண்டாட வழிவகுத்தார்.

### போர்த்துகல் நாட்டு பயணி பெட்ரோ காப்ரல்

1500இல் பெட்ரோ காப்ரல் மேற்குநோக்கி பயணித்து பிரேசிலை கண்டுபிடித்தார். இந்தத் தீவுக்கு உண்மையான சிலுவையின் தீவு (ஐலாண்ட் ஆஃப் தி ட்ரூ கிராஸ்) என்றுபெயரிட்டார். போர்த்துகலின் காலனியாக பிரேசில் மாறியது. எஞ்சிய வரலாறு 11ஆம் அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.



பெட்ரோ காப்ரல்

வாஸ்கோடகாமா சென்ற வழியைப் பின்பற்றி இந்தியாவுக்குப் பயணித்த காப்ரல் கோழிக்கோட்டை சென்றடைந்தார். தொடக்கத்தில் போர்த்துகீசியர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்ட ஆட்சியாளர் சாமரின் ஒரு கோட்டையைக் கட்டி வர்த்தகம் செய்ய காப்ரலை அனுமதித்தார். எனினும் விரைவில் அராபிய வர்த்தகர்களுடன் கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டு ஒரு பெரிய வர்த்தகச்சாவடியை அரபு படைகள் தாக்கியதில் பல போர்த்துகீசிய படைவீரர்கள் கொல்லப்பட்டனர். போர்த்துகல் மேற்கொண்ட வலுப்படுத்தும் நடவடிக்கைகள் மூலமாக காப்ரல் பதிலடிகொடுத்தார். பத்து அராபிய கப்பல்களை கைப்பற்றிய அவர் அதில் இருந்த மாலுமிகளை சிரச்சேதம் செய்தார். தெற்கில் உள்ள இந்திய துறைமுக நகரான கொச்சினுக்கு (தற்போது கொச்சி) அவர் புறப்பட்டுச் சென்றார். அங்கு அவர் வரவேற்கப்பட்டு வர்த்தகம் செய்ய அனுமதிக்கப்பட்டார். கண்ணனூரில் (தற்போது கண்ணூர்) ஒரு துறைமுகத்தை நிறுவியபிறகு அவர் 1501 ஜனவரி 16இல் நறுமணப் பொருட்கள் நிரப்பப்பட்ட ஆறு கப்பல்களுடன் போர்த்துகலுக்கு பயணம் மேற்கொண்டார். எனினும் செல்லும் வழியில் இரண்டு கப்பல்கள் வழிதவறிப்போயின. இறுதியாக காப்ரல் 1501ஆம் ஆண்டு ஜூன் 23ஆம் தேதி நான்கு கப்பல்களுடன் போர்த்துகல் திரும்பினார்.


12th_History_TM_Unit_10_V2.indd 26
24-09-2019 09:53:35

### மெகல்லனின் கப்பல் பயணம்

போர்த்துகீசிய மாலுமியான பெர்டினான்ட் மெகல்லன் உலகை ஆராய ஸ்பெயின் நாட்டின் ஆதரவைப் பெற்றார். செவில்லேவில் இருந்து மேற்குநோக்கி 1519ஆம் ஆண்டு ஐந்து கப்பல்களுடன் புறப்பட்டார். தென்அமெரிக்காவின் முனையில் ஒரு நீர்ச்சந்தியை கண்டுபிடித்த அவர் அதற்கு 'மெகல்லன் நீர்ச்சந்தி' என்று பெயரிட்டார். அங்கிருந்து இந்த மாலுமிகள் குழு பெரிய தென் கடலைச் சென்று சேர்ந்தது. இந்தக் கடல் அமைதியாக இருந்ததால் அதற்கு பசிபிக் பெருங்கடல் என்று பெயரிட்டார் (Pacifico என்றால் ஸ்பானிய மொழியில் அமைதியானது என்று பொருள்). இந்தப் பயணத்தின்போது மெகல்லன் தனது இரண்டு கப்பல்களையும், நோய் காரணமாக பல மாலுமிகளையும் இழந்தார். பிலிப்பி தீவில் மெகல்லன் கொல்லப்பட்டார். இறுதியாக விட்டோரியா (விக்டோரியா) என்ற ஒரேயொரு கப்பல் மட்டும் 18 மாலுமிகளுடன் 1522இல் செவில்லேவுக்குத் திரும்பியது. உலகத்தை முதன்முதலாக சுற்றிய கப்பல் என்ற சிறப்பு விட்டோரியா கப்பலுக்குக் கிடைத்தது.



மெகல்லன்

துருக்கியர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர் மற்றும் ஜெர்மானியர்கள் ஆகியோர் ஆசியாவுக்கான புதிய கடல்வழித்தடங்களின் முக்கியத்துவத்தை அப்போது அறிந்திருக்கவில்லை. அமெரிக்காவை ஐரோப்பியர்கள் கண்டுபிடித்ததன் அரசியல் முக்கியத்துவத்தையும் அவர்கள் அறியவேண்டிய நிலைமையில் இருந்தார்கள். ஸ்பெயினைச் சேர்ந்த போர் வெற்றியாளரான ஹெர்னன் கார்ட்ஸ் என்பவர் ஒரு சில வீரர்களுடன் ஸ்பெயினுக்காக மெக்சிகோ பேரரசைக் கைப்பற்றினார். பனாமாவின் நிலச்சந்தியைக் கடந்த பிஸார்ரோ (1530) தென்அமெரிக்காவில் இன்கா பேரரசினை அழித்து பெரு என்ற மற்றொரு நாட்டைக் கைப்பற்றினார்.

### இதர முக்கியமான ஐரோப்பிய பயணங்கள்


போர்த்துகீசிய மற்றும் ஸ்பெயின் நாட்டு கடற்பயணம் மேற்கொள்வோரை பின்பற்றி இதர ஐரோப்பிய நாடுகளும் உலகை வலம் வந்து புதிய நிலப்பகுதிகளைக் கண்டுபிடிக்க ஆர்வம் கொண்டன. உலகத்தின் பல புதிய நிலப்பகுதிகளை கண்டுபிடிப்பதற்காக இத்தாலிய கடற்பயணியான ஜான் கேபட் என்பவரை இங்கிலாந்து நியமித்தது. அவர் தனது பயணத்தின் போதே கனடாவை கண்டுபிடித்து அதனை ஆங்கிலேயக் காலனியாக மாற்றினார். மற்றொரு இத்தாலியரான ஜியோவனி டா வெர்ராசானோ பிரான்ஸ் நாட்டுக்காக நிலப்பகுதிகளை ஆராய்ந்தார். கிழக்கு கனடாவில் பிரான்ஸ் நாட்டுக்காக மாகாணங்களை இணைத்தார். ஹென்றி ஹட்சன் என்ற ஆங்கிலேய கடற்பயணி வட அமெரிக்காவில் இருந்து பசிபிக் பெருங்கடல் பகுதிக்கு பாதை காண முயன்றார். அவர் தனது முயற்சியில் தோல்வி அடைந்தாலும் அவர் அந்தப் பகுதியை ஆராய்ந்தார். அது தற்போது ஹட்சன் நதி என்ற பெயர் தாங்கி இருக்கிறது.

**ஸ்பானிய ஆயுதங்களால் ஏற்பட்ட பேரழிவின் தாக்கம்:** அஸ்டெக்குகள் போதுமான எண்ணிக்கையில் வீரர்கள் ஆயுதங்கள் மற்றும் எஃகு கத்திகளைக் கொண்டிருந்தாலும் ஒரேயொரு ஸ்பானிய வீரர் டஜன் கணக்கில் ஏன் நூற்றுக்கணக்கான எதிரிப்படை வீரர்களைக் கொல்லமுடியும். "அவர்கள் திடீரென, குத்திக் கிழித்துக் கொன்றனர்" ஐரோப்பிய ஆயுதங்களின் மோசமான விளைவு குறித்து ஒரு உள்நாட்டு வரலாற்றாசிரியர் இவ்வாறு குறிப்பிடுகிறார். மேலும் "மற்றவர்கள் ஒரே வீச்சில் சிரச்சேதம் செய்யப்பட்டனர். இதர வீரர்கள் கொலைக்களத்தில் இருந்து ஓடித்தப்பிக்க முயன்றனர். அவர்களின் குடல் அவர்களில் இருந்து கீழே விழுந்து கால்களைச் சுற்றிக்கொண்டது." சிறிய அம்மை பரவியதால் அஸ்டெக் வலு குறைந்து காணப்பட்டது. இதன் மூலம் கார்டெசுக்கு மறுபடியும் குழுக்களை ஒன்று சேர்க்க நேரம் கிடைத்தது. இதனால் இறுதி வெற்றியும் பெற்றனர் .

இங்கிலாந்திலிருந்து போட்டி அதிகமானதை அடுத்து ஸ்பெயின் மற்றும் இங்கிலாந்திற்கு இடையே மோதல் ஏற்பட்டது. ஸ்பெயின் எதிர்ப்புகளைத் தெரிவித்த நிலையிலும் கலிபோர்னியா பகுதியை பிரான்சிஸ் டிரேக் என்பவர் ஆங்கிலேயருக்காக இணைத்தார். இதனால் இரண்டு நாடுகளுக்கும் இடையே போர் மூண்டது. 1588இல் ஸ்பெயினின் அரசர் இரண்டாம் பிலிப் ஸ்பெயின் நாட்டு கப்பல் படையை 130 கப்பல்கள் மற்றும் 31,000 படைவீரர்களுடன் இங்கிலாந்துமீது போர் தொடுக்க அனுப்பினார். எனினும் ஆங்கிலேயர்கள் எளிதாக கையாளக்கூடிய தங்கள் படைகளின் நடவடிக்கையால் ஸ்பெயின் நாட்டுப் படையை (Spanish Armada) வீழ்த்தினார்கள். நவீன உலகில் ஒரு வலுவான சக்தியாக பிரிட்டிஷார் உருவெடுக்க இது காரணமாக அமைந்தது.



12th_History_TM_Unit_10_V2.indd 27
24-09-2019 09:53:35






12th_History_TM_Unit_10_V2.indd 28 24-09-2019 09:53:35

## 10.3 வர்த்தகப் புரட்சி

மறுமலர்ச்சி மற்றும் சீர்த்திருத்த நடவடிக்கைகளுடன் அடிப்படைப் பொருளாதார மாற்றங்களும் நிகழ்ந்தன. இந்த தொடர் பொருளாதார மாற்றங்களின் விளைவாக இடைக்காலத்தின் பிற்பகுதியில் இருந்த ஓரளவு நிலையான, உள்ளூர் நிலையிலான, இலாப நோக்கற்ற பொருளாதாரம், பதினான்காம் நூற்றாண்டு மற்றும் அதனை அடுத்து வந்த நூற்றாண்டுகளில் உலகளாவிய வலுவான முதலாளித்துவ நிலைக்கு மாற்றம் பெற்றது. வர்த்தகப் புரட்சி என்று அழைக்கப்பட்ட இது திடீரென நிகழ்ந்துவிடவில்லை படிப்படியாகவே நிகழ்ந்தது.

புரட்சியின் தொடக்கத்துக்கான காரணங்கள்

(அ) மத்தியதரைக்கடல் வர்த்தகம் இத்தாலிய நகரங்களால் கைப்பற்றப்பட்டது.

(ஆ) இத்தாலிய நகரங்கள் மற்றும் வடக்கு ஐரோப்பாவில் உள்ள வர்த்தக அமைப்பான ஹன்சீடிக் லீக் எனும் அமைப்பை (ஒரு வணிக சங்கம்) சேர்ந்த வர்த்தகர்கள் இடையே வர்த்தகம் செழிப்படைந்து மேம்பட்டது.

(இ) வெனிஸின் டூகா நாணயமும் பிளாரன்ஸின் ப்ளோரின் நாணயமும் அறிமுகம் செய்யப்பட்டது.

(ஈ) வர்த்தகம், கப்பல் மூலம் சரக்குப் போக்குவரத்து மற்றும் சுரங்கத் தொழில்மூலமாக ஈட்டப்பட்ட பெரும் தொகை சேர்ந்தது.

(உ) போர் சாதனங்களுக்கான தேவையும் அதிகம் வரி வசூலிக்கக்கூடிய சொத்தை உருவாக்கும் வகையில் வணிகத்தை மேம்படுத்த புதிய அரசர்கள் கொடுத்த ஊக்கம்.

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இந்தக் காரணிகளுடன் இத்தாலியக் கட்டுப்பாடு இன்றி கிழக்குப்பகுதிக்கு புதிய வழித்தடத்தை கண்டுபிடிக்க ஸ்பெயின் மற்றும் போர்த்துகீசிய வணிகர்கள் அளித்த ஊக்கம் வர்த்தகப் புரட்சிக்கு வித்திட்டன.

### வர்த்தகப் புரட்சியின் முக்கிய விளைவுகள்

வங்கித்துறை வளர்ச்சி என்பது வர்த்தகப் புரட்சிக்கான முக்கிய காரணியாகும். வட்டிக்கு பணம் கொடுப்பது, வங்கித்துறை ஆகியன இடைக்காலத்தில் மரியாதை மிகுந்த தொழில் இல்லை என்று சமயத்தால் குறிக்கப்பட்டிருந்தன. ஆனால் 14ஆம் நூற்றாண்டில் லாபத்துக்காக பணத்தை கடனாக வழங்கும் தொழில் ஒரு நிறுவப்பட்ட வர்த்தக நடைமுறையாக மாறியது. வங்கித்துறை சார்ந்த நிறுவனங்களை இத்தாலிய நகரங்களின் மிகப்பெரிய வர்த்தக மையங்கள்தான் உண்மையில் நிறுவின. பதினைந்தாம் நூற்றாண்டில் வங்கித் தொழில் தெற்கு ஜெர்மனி மற்றும் பிரான்சுக்கு பரவியது. தனியார் நிதி நிறுவனங்களின் எழுச்சியை அடுத்து அரசு வங்கிகள் நிறுவப்பட்டன. 1657இல் பேங்க் ஆஃப் ஸ்வீடன் முதலில் நிறுவப்பட்டது. 1694இல் பேங்க் ஆஃப் இங்கிலாந்து நிறுவப்பட்டது.

சுரங்கத்தொழில், உருக்குதல் தொழில் ஆகிய புதிய தொழில்கள் வளர்ந்து தொழில்நுட்ப வளர்ச்சியால் மேலும் ஊக்கம் பெற்றன. வணிக அமைப்புகளிலும் மாற்றம் வந்தது. நெறிப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் உருவாகின. ஒரு பொதுக்காரணத்துக்காக வணிகர்கள் ஒன்றிணைந்து இத்தகைய நெறிப்படுத்தப்பட்ட கம்பெனியை உருவாக்கினார்கள். நெதர்லாந்து மற்றும் ஜெர்மனி இடையே வர்த்தகத்திற்காக நிறுவப்பட்ட மெர்ச்சன்ட் அட்வென்சரர்ஸ் என்ற ஆங்கிலேய கம்பெனி ஒரு நல்ல உதாரணமாகும்.

இடைக்காலத்தின் பிற்பகுதியில் கைவினைக் குழுக்களால் உருவாக்கப்பட்ட உற்பத்திமுறை செயலிழந்தது. பதினேழாம் நூற்றாண்டில் நெறிப்படுத்தப்பட்ட கம்பெனி என்பது கூட்டுப் பங்கு நிறுவனங்களாக புதிய வகையில் உருமாற்றம் பெற்றது. வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் கூட்டுப்பங்கு நிறுவனம் எனும் கருத்து டச்சு நாட்டின் கண்டுபிடிப்பு ஆகும். இது அதிக எண்ணிக்கையிலான மக்களிடையே அபாயங்களை (மற்றும் இலாபங்களை) பரப்புவதன் மூலம் பெரிய அளவிலான முதலீட்டை சாத்தியமாக்கியது.

பிந்தைய கட்டங்களில், வர்த்தக புரட்சியின் ஒரு பகுதியாக வணிகவியற் கொள்கை (வணிகவாதம் – mercantilism) என்றழைக்கப்பட்ட புதிய கோட்பாடுகளும் நடைமுறைகளும் ஏற்கப்பட்டன. தேசிய வளமையை மேம்படுத்துவது மற்றும் அரசின் அதிகாரத்தை அதிகரிப்பது ஆகியவற்றில் அரசின் தலையீட்டை உடையது வணிகவாதம் என்ற முறையாகும். தலையீட்டின் நோக்கம் வர்த்தகம் மற்றும் உற்பத்தியின் அளவை விரிவாக்குவது மட்டுமல்லாமல் அரசின் கருவூலத்துக்கு அதிக நிதியைக் கொண்டுவருவதும் ஆகும்.

நடுத்தரவர்க்கத்தை பொருளாதார அதிகாரம் பெற்றவர்களாக உயர்த்தியது வர்த்தகப் புரட்சியின் இதர முக்கியமான முடிவுகளாகும். வணிகர்கள், வங்கியாளர்கள், கப்பல் முதலாளிகள், முதன்மை



12th_History_TM_Unit_10_V2.indd 29 24-09-2019 09:53:35

முதலீட்டாளர்கள் மற்றும் தொழிற்துறை தொழில் முனைவோர் போன்ற பலரும் இந்த நடுத்தர வகுப்பு நிலையில் உள்ளடங்கினார்கள். அதிகரிக்கும் வளமையின் விளைவாகவும் நிலப்பிரபுத்துவத்துக்கு எதிராக அரசரை ஆதரிப்பதன் விளைவாகவும் அவர்கள் அதிக அதிகாரம் பெற்றனர்.

வர்த்தகப் புரட்சியின் முக்கிய எதிர்மறை விளைவாக அமைந்தது அடிமைத்தனம் மீண்டும் புத்துயிர் பெற்றதே ஆகும். ஐரோப்பிய சமூகத்தில் இருந்து அடிமைத்தனம் முதல் ஆயிரமாவது (மில்லினியம்) ஆண்டின் இறுதியில் முற்றிலுமாக காணாமல் போயிருந்தது. ஆனால் ஸ்பானிய, போர்த்துகீசிய மற்றும் ஆங்கிலேய காலனிகளில் சுரங்கம் மற்றும் தோட்டவிவசாயம் வளர்ச்சி கண்டதையடுத்து அடிமைகளை திறமையற்ற தொழிலாளர்களாக ஆளெடுக்கும் நடவடிக்கைகள் தொடங்கின. பூர்வீக அமெரிக்கர்களை வேலை வாங்குவது கடினமானதாக இருந்ததால் அவர்களை அடிமைகளாக்கும் முயற்சி தோல்வி கண்டது. ஆப்பிரிக்கர்களை இறக்குமதி செய்ததன் மூலம் இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்பட்டது. டிரான்ஸ் அட்லாண்டிக் அடிமை வர்த்தகம் மூலமாக 1 கோடியே 10 லட்சத்துக்கும் அதிகமான ஆப்பிரிக்கர்கள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மோசமான கதை நவீன உலகை உருவாக்குவதில் ஒரு அவமானச் செயலாக பதிவுபெற்றுள்ளது.

இறுதியாக, வர்த்தகப் புரட்சி தொழிற்புரட்சிக்கு வழியமைத்தது. முதலாளித்துவ வகுப்பை உருவாக்கியதன் விளைவாகவும் வர்த்தகர்களை அடிப்படையாகக் கொண்ட கொள்கையை பின்பற்றியதன் விளைவாகவும் உற்பத்திப் பொருட்களின் வளர்ச்சிக்கு ஊக்கம் கிடைத்தது. தொழிற்சாலை மூலமான உற்பத்திக்கு ஒரு சிறந்த உதாரணமாக பருத்தித் துணி உற்பத்தி விளங்கியது.

## 10.4 பிராட்டஸ்டன்ட் சீர்திருத்தமும் கத்தோலிக்க எதிர் சீர்திருத்த இயக்கமும்

இடைக்கால ஐரோப்பாவில் மக்களில் பெரும்பான்மையான கிறித்தவர்கள் கடவுளின் ஆற்றலில் நம்பிக்கை வைத்தார்கள். கடவுள் நம்பிக்கை உடைய கத்தோலிக்கர்கள் தேவாலயங்கள் தங்களுக்கும் கடவுளுக்கும் இடையே ஒரு ஊடகமாக செயல்படுவதை ஏற்றார்கள். பிறப்பு முதல் இறப்பு வரை பொதுமக்களுக்கு தேவாலயங்கள் தான் முக்கிய மையப்புள்ளியாக விளங்கியது. காலப்போக்கில் தேவாலயங்கள் வைத்திருந்த அதிகாரம் பன்மடங்காகப் பெருகியது. எனினும் ஐரோப்பாவின் மன்னர்களும் மக்களும் தேவாலயங்களின் கை ஓங்கிவருவதை உணர ஆரம்பித்தனர். போப்பாண்டவரின் அதிகாரத்துக்கு மதித்துநடக்காத, பின்பற்றாத ஒரு சில போக்குகளும் அவ்வப்போது இருந்தன. இந்த புதிய மாற்றத்தை வன்முறையால் கையாள வேண்டிய விசாரணைப் போக்கை தேவாலயம் உருவாக்கியது. தேவாலயங்களின் செயல்பாடுகளைக் கேள்விகேட்ட மக்களை இந்த விசாரணை அமைப்பு சமயவிரோதப்போக்கில் ஈடுபடுபவர்கள் மற்றும் பெண்களை சூனியக்காரிகள் என்று அடையாளப்படுத்தியது.

தேவாலயத்தின் எதேச்சதிகாரத்துக்கு எதிராக கிளர்ச்சி ஏற்படுத்தியவர்கள் பிராட்டஸ்டன்ட் (எதிர்ப்பாளர்கள்) என்றழைக்கப்பட்டனர். ஏனென்றால் அவர்கள் ரோமன் கத்தோலிக்க கிறித்தவர்களின் கொள்கைகளை எதிர்த்து கிளம்பியதால் அப்படி அழைக்கப்பட்டனர். இந்த இயக்கமே கிறித்தவ சீர்திருத்த இயக்கம் என்றானது. ஊழல் மற்றும் தேவாலயங்களின் எதேச்சதிகாரப் போக்குக்கு எதிரான பிரபலமான கிளர்ச்சியாகும். விசுவாசமான ரோமானிய தேவாலய ஆதரவாளர்கள் தேவாலயத்துக்குள் நடந்த சீர்கேடுகளைக் களைய சீர்திருத்தங்களை உள்ளிருந்தபடியே நடத்தினார்கள். இந்த சீர்திருத்த இயக்கம் 'எதிர் சீர்திருத்த இயக்கம்' என்று அழைக்கப்பட்டது. இது போராட்டம் நடத்தியவர்களுக்கு எதிராக உறுதியாக களம் கண்டது.

### சீர்திருத்த இயக்கத்துக்கான காரணங்கள்

**தேவாலய நிர்வாகத்தினரின் ஊழல்**

பாவமன்னிப்பு வழங்கும் முறைக்கு பணம் பெற்றது (ஒருவரின் பாவத்தை மன்னித்து அவருக்கு புனிதத்தை வழங்கும் போப்பாண்டவரின் பாவமன்னிப்புக்கு பணம் பெற்றது), வேண்டியவர்களுக்கு வேலை வழங்குவது, தேவாலயப் பணிகளை பணத்துக்கு விற்பது ஆகியன தாக்குதலுக்கு உள்ளானது. போப்பாண்டவரிடம் பாவமன்னிப்பைப் பெற ஏழைகள் பணம் கொடுக்க நேரிட்டதால் அவர்கள் பணமின்றி தவித்தார்கள். ஆறாம் அலெக்ஸாண்டர், இரண்டாம் ஜூலியஸ், பத்தாம் லியோ ஆகிய சில போப்பாண்டவர்கள் இது போன்ற நடைமுறைகளால் ஆட்சியாளர்களிடம் சண்டையிட்டனர். போப் பத்தாம் லியோவுக்கு பணம் கொடுத்து மெயின்ஸின் ஆல்பர்ட் என்பவர் ஆர்ச்பிஷபாக பதவியேற்ற


போப் பத்தாம் லியோ



12th_History_TM_Unit_10_V2.indd 30 24-09-2019 09:53:35

சம்பவமும் நடந்தது. போப்பாண்டவர் இந்தப் பணத்தை வசூலித்ததாகக் கூறப்பட்டதோடு அதில் பாதிப்பணம் செயின்ட் பீட்டர் பேராலயத்தைக் கட்ட பயன்படுத்தப்படும் என்றும் சொல்லப்பட்டது.

மெடிசி குடும்பம் போன்ற மிகப்பெரிய வர்த்தகக் குடும்பங்களின் உறுப்பினர்கள் தங்கள் சொத்தைப் பெருக்கவும் தங்களுக்கு முறைதவறிப் பிறந்த மகன்களுக்கு அந்தச் சொத்தை வழங்கவும் போப்பாண்டவர்களாக மாறினார்கள். பிஷப் பதவிகளில் அனுபவம் இல்லாத இளைஞர்கள் நியமிக்கப்பட்டனர். பல்வேறு தேவாலயங்களில் இருந்து வருமானம் பெற்ற பாதிரிமார்கள் அவற்றில் எந்த தேவாலயத்துக்கும் சென்றதில்லை. விவசாயிகள் இந்த தேவாலயத்தை அடக்கி ஆளும் நிலப்பிரபுவாகப் பார்த்தனர். பல இளவரசர்கள் தங்கள் பேராசை மிகுந்த கண்களை தேவாலயங்களின் பரந்துபட்ட சொத்துக்களின் மீது வைத்தனர்.

### கிறித்தவ சீர்திருத்த இயக்கத்தின் பின் இருந்தவர்கள்


ஜான் வைகிளிஃப்

கிறித்தவ சீர்திருத்த இயக்கம் சில முன்னோடிகளைக் கொண்டிருந்தது. எராஸ்மஸ், தேவாலய வழக்கங்கள் மற்றும் போதனைகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்தினார். மடமையின் புகழ்ச்சி (The Praise of Folly, 1511) என்ற அவரது சிறந்த படைப்பு கிறித்தவ துறவிகள் மற்றும் இறையியல் போதகர்களையும் கேலி செய்தது. ஜான் வைகிளிஃப் மற்றும் ஜான் ஹஸ் ஆகியோர் அவருக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னால் சீர்திருத்தத்துக்காக உழைத்தவர்களாவர். கடவுளின் செய்தியை லத்தீன் மொழியில் போதனை செய்யாமல் மக்களின் மொழியில் போதித்தனர். ஜான் வைகிளிஃப் என்ற ஆங்கிலேய பாதிரியார் பைபிளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த முதல் மொழிபெயர்ப்பாளர் என்பதால் பிரபலமடைந்தார். அவர் தனது வாழ்நாளில் ரோமானிய தேவாலயத்தின் கோபத்தில் இருந்து தப்பிப் பிழைத்தார். ஆனால் 1415ஆம் ஆண்டு அவர் மறைந்து 31 ஆண்டுகளுக்குப் பிறகு அவரது உடலைத் தோண்டி எடுத்து அவரது எலும்புகளை எரியூட்டுமாறு கிறித்தவ திருச்சபை ஆணையிட்டது. இந்த ஆணை சிரத்தையுடன் பின்பற்றப்பட்டது.

வைகிளிஃபின் எலும்புகள் எரியூட்டப்பட்டாலும் அவரது கருத்துகளை ஒடுக்க முடியவில்லை. இந்த சம்பவம் குறித்த தகவல் பொஹிமியாவுக்கு பரவியது; ஜான் ஹஸ் இதனால் ஊக்கம் பெற்றார். பிரேக் பல்கலைக்கழகத்தின் தலைவராக இருந்த ஹஸ், தனது கருத்துகளுக்காக, தேவாலய நடவடிக்கைகளில் இருந்து போப்பாண்டவரால் ஒதுக்கி வைக்கப்பட்டார். அவர் தனது நகரில் பிரபலமாக இருந்ததால் பிரச்சனையின்றி தப்பித்தார். பேரரசர் அவர்களால் பாதுகாப்பாக தேவாலய சபைக் கூட்டம் நடந்துகொண்டிருந்த சுவிட்சர்லாந்தின் கான்டன்ட்டுக்கு அழைக்கப்பட்டார். ஹஸ் அங்கு சென்றார். தனது தவறை ஒப்புக்கொள்ளுமாறு அவருக்கு நெருக்கடி கொடுக்கப்பட்டது. அவர் மறுத்த நிலையில், அவரது பாதுகாப்புக்கு அவர்கள் உத்தரவாதம் தந்த நிலையிலும் உயிருடன் எரிக்கப்பட்டார்.

கிறித்தவ சீர்திருத்த இயக்கத்தை மூன்று சீர்திருத்தவாதிகள் மூன்று வெவ்வேறு இடங்களில் பிரபலப்படுத்தினார்கள். விட்டன்பெர்கில் மார்ட்டின் லூதர், சூரிச்சில் உல்ரிச் ஸ்விங்ளி மற்றும் ஜெனீவாவில் ஜான் கால்வின் ஆகியோர் அந்த மூவராவர்.

### மார்ட்டின் லூதர் (1483–1546)

கிறித்தவப் பாதிரியாரான மார்ட்டின் லூதர் ரோமுக்கு எதிராக ஜெர்மனியில் கிளர்ச்சியில் ஈடுபட்டார். ரோமுக்கு பயணம் மேற்கொண்டபிறகு அவர் தேவாலயத்தின் ஊழல் மற்றும் ஆடம்பரம் குறித்து வருந்தினார். 95 குறிப்புகள் என்ற தலைப்பில் ரோமானிய தேவாலயத்திற்கு எதிராக அவர் 95 புகார்களை எழுதினார். அந்த புகார்களை விட்டன்பெர்கில் உள்ள தேவாலயத்தின் கதவில் ஆணி அடித்து தொங்கவிட்டார். தேவாலய சீர்திருத்தத்துக்காக அவர் சில ஆலோசனைகளை வழங்கினார். இந்த கருத்துகள் பரவுவதற்கு அச்சகத்தின் பணி மகத்தானதாக இருந்தது. பைபிள் மட்டுமே உன்னதமானது; போப்பாண்டவரோ அல்லது பிஷப்புகளோ இல்லை என்று அவர் வாதிட்டார். ஞானஸ்நானம் வழங்குவது மற்றும் புனித சமய சடங்கு ஆகிய இரண்டு மட்டுமே பைபிளால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை. கடவுளின் மீது இருக்கும் ஒருவரது நம்பிக்கையைப் பொறுத்து தான் இரட்சிப்பை அடையமுடியும் என்று அவர் கூறினார். இவ்வாறாக பிராட்டஸ்டன்ட் கிளர்ச்சி துவங்கியது. லூதர் பைபிளை ஜெர்மானிய மொழியில் மொழிபெயர்த்தார். லூதரன் பிராட்டஸ்டன்ட்கள் சில விதிகளையும் நெறிமுறைகளையும் வகுத்தனர். அவர்கள் போப்பாண்டவரின் அதிகாரத்தை ஏற்கவில்லை.



12th_History_TM_Unit_10_V2.indd 31 24-09-2019 09:53:35

அவர்கள் தங்களுக்கு என்று தேவாலயங்களை நிறுவினார்கள், நிர்வாக அமைப்புகளை உருவாக்கினார்கள், பைபிளின் உன்னதம் பற்றி மட்டுமே நம்பினார்கள். பாதிரியார்களுக்கான விதிமுறைகள் தளர்த்தப்பட்டு அவர்கள் திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர்.





மார்ட்டின் லூதர் மற்றும் அவரது 95 குறிப்புகள்

வோர்ம்ஸ் சபையில் கலந்துகொள்ளுமாறு லூதருக்கு அழைப்புவிடுத்த போப்பாண்டவர் அவருடன் அமைதிப்பேச்சுகளில் ஈடுபட முயன்றார். அந்தப் பேச்சுகள் தோல்விகண்டன. இந்த வோர்ம்ஸ் சபையில் லூதரின் புத்தகங்கள் அனுமதி மறுக்கப்பட்டு எரிக்கப்பட்டன. புனித ரோமானிய அரசாங்கத்தின் சட்டத்துக்குப் புறம்பானவர் என்று பேரரசரால் அறிவிக்கப்பட்டார். மார்ட்டின் லூதரின் முற்போக்கான கருத்துகள் பலரை ஈர்த்தன. அவர்களில் ஒருவர் தான் வகுப்புகள் அற்ற சமூகத்துக்காகப் போராடிய தாமஸ் முன்ட்சர் ஆவார். இதனை அடுத்து ஜெர்மனியின் பல பகுதிகளில் விவசாய கிளர்ச்சி இயக்கங்கள் தோன்றின. எனினும் இந்த சண்டையில் நிலப்பிரபுக்களை ஆதரித்த மார்ட்டின் லூதர் விவசாயிகளின் இயக்கத்தை கைவிட்டார். பிராட்டஸ்டன்ட்கள் பிரபலம் அடைந்த நிலையில் ஜெர்மனியில் உள்நாட்டுப்போர் நிகழ்ந்தது. அந்தப்போரின் இறுதியில் வடஜெர்மனி பிராட்டஸ்டன்ட் நாடாக மாறியது. அதே நேரத்தில் தெற்குஜெர்மனி கத்தோலிக்க நாடாகத் தொடர்ந்தது.

### ஸ்விங்கிளி (1484–1531)

சுவிட்சர்லாந்தில் உல்ரிச் ஸ்விங்கிளி என்பவர் இதே போன்ற இயக்கத்தை ஆரம்பித்தார். நெதர்லாந்து மனிதநேய ஆர்வலர் எராஸ்மஸ் என்பவரால் அவர் ஈர்க்கப்பட்டிருந்தார். இவர் லூதரின் சில கருத்துகளை ஏற்கவில்லை. ரொட்டியிலும் திராட்சை ரசத்திலும் கடவுள் இல்லை; நம்புபவரின் இதயத்தில் இயேசு கிறிஸ்து உயிர்வாழ்வதாக ஸ்விங்கிளி நம்பினார். அவர் கத்தோலிக்க தேவாலய நிர்வாகத்துக்கு எதிராக சீர்திருத்தக் கருத்துகளை கோடிட்டுக்காட்டும் 67 சீர்திருத்தக் கட்டுரைகளை எழுதினார். துறவிகள் பிரம்மச்சரியத்தை கடைபிடிப்பதை எதிர்த்த அவர் மடாலயங்கள் கட்டுவது, நோன்பிருப்பது, புனித யாத்திரை மேற்கொள்வது ஆகியவற்றையும் கடுமையாக எதிர்த்தார். பிராட்டஸ்டன்ட் இயக்கத்தை வலுவாக்க லூதரையும் ஸ்விங்கிளியையும் ஒன்றாக இணைப்பது குறித்த முயற்சிகள் தோல்வி கண்டன.




ஸ்விங்கிளி

இயேசு நாதரின் புனித இறுதி விருந்தை ஒத்த புனிதச் சமயச் சடங்கை கத்தோலிக்கர்கள் தங்கள் தேவாலயங்களில் பின்பற்றினார்கள். இயேசு கிறிஸ்து மேற்கொண்ட தியாகங்களை நினைவுகூரும் வகையில் இந்தச் சடங்கில் கத்தோலிக்க கிறித்தவர்கள் பங்கேற்றனர். ரொட்டியும் திராட்சை ரசமும் இயேசுவின் சதையும் இரத்தமும் என்று அவர்கள் நம்பி ஏற்றுக்கொள்கின்றனர்.

### ஜான் கால்வின் (1509–1564)

பிராட்டஸ்டன்ட் இயக்கத்தின் பிற்கால தலைவர்களில் ஒருவர் ஜான் கால்வின் ஆவார். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பிராட்டஸ்டன்ட் ஆன அவர் தேவாலய நிர்வாகத்தின் நடவடிக்கைகளை எதிர்த்தார். போப்பாண்டவரை எதிர்த்ததற்காக அவர் கிறித்தவ விரோத நடவடிக்கைகளுக்காக அவர் சபைக் கூட்டங்களிலிருந்து விலக்கி வைக்கப்பட்டார். அதன் பிறகு அவர் சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் குடியேறினார். 'கிறித்தவ சமய நிறுவனங்கள்' (*Institutes of the Christian Religion*) என்ற அவரது லத்தீன்மொழிப் புத்தகம் அவரது கருத்துகளை உள்ளடக்கியது. கால்வின் ஒரு மிகப்பெரிய ஒருங்கிணைப்பாளர். குறிப்பிட்ட காலத்துக்கு அவர் ஜெனீவா நகரையே கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். பைபிள் போதனைகளின் அடிப்படையிலான ஒரு கட்டுக்கோப்பான சமூகத்தைப் படைக்க அவர் பெரிதும் முயன்றார். கால்வீனியம் என்ற சமயப்பிரிவு அவரது வாழ்நாளிலேயே பிரபலம் அடைந்தது. ஐரோப்பாவின் இதர பகுதிகளுக்கு பரவிய நிலையில் பிரான்ஸில் ஹுயுக்நோக்கள் ஆகவும், இங்கிலாந்தில் பியூரிட்டன்கள் ஆகவும் ஸ்காட்லாந்தில் பிரஸ்பைட்டீரியன்கள் ஆகவும் அவர்கள் அடையாளம் காணப்பட்டனர்.



ஜான் கால்வின்



12th_History_TM_Unit_10_V2.indd 32 24-09-2019 09:53:36

## ஆங்கிலேய சீர்த்திருத்தம்

இங்கிலாந்தில் சீர்த்திருத்த நடவடிக்கைகள் தத்துவ அறிஞர்களால் தொடங்கப்படாமல் மன்னராலேயே தொடங்கப்பட்டது. எட்டாம் ஹென்றி என்பவர் தேவாலய நிர்வாகத்தில் இருந்து அரசை பிரித்தார். ஆரம்பகாலங்களில் நம்பிக்கைமிகு கத்தோலிக்கராக இருந்த அவர் தனது தனிப்பட்ட தேவைகளுக்காக பிராட்டஸ்டன்ட்களை ஆதரித்தார் (ஆன்பொலின் என்ற வேறொரு பெண்ணை மறுமணம் செய்வதற்காக அராகன் அரசியும் அவரது மனைவியுமான கேதரின் என்பவரை விவாகரத்து செய்தார்). 1534இல் மேலாதிக்கச் சட்டம் (உன்னத சட்டம்) என்ற சட்டத்தை அவர் இயற்றி ரோம் உடனான இங்கிலாந்தின் தொடர்பை துண்டித்தார். ஆங்கிலிகன் தேவாலயத்தை நிறுவிய அவர் மடாலயங்கள் மற்றும் அனைத்து கிறித்தவ நிறுவனங்களுக்குச் சொந்தமான தேவாலய சொத்துக்களை பறிமுதல்செய்ய உத்தரவிட்டார். இந்த பிராட்டஸ்டன்ட் இயக்கம் பியூரிட்டன் இயக்கம் என்ற பெயரில் இங்கிலாந்தின் பல பகுதிகள் மற்றும் அதன் காலனிகளுக்கும் பரவியது.

## சீர்திருத்த இயக்கத்தின் விளைவுகள்

அ) **ஐரோப்பிய நாடுகளில் பிரிவுகள்:** தேவாலய நிர்வாகத்தில் ஏற்பட்ட பிளவு அந்த நாட்டின் சமயவழிபாடுகளில் பிரிவுகளை ஏற்படுத்தியது. வடஜெர்மனி லூதரன் சபையாகவும் தென்ஜெர்மனி கத்தோலிக்கத்தை தொடர்வதையும் கொண்டன. இங்கிலாந்து பிராட்டஸ்டன்ட் ஆகவும் ஸ்காட்லாந்தும் அயர்லாந்து மக்களும் தீவிர கத்தோலிக்க ஆதரவாளர்களாக மாறினர்.

ஆ) **கல்வியறிவு:** சீர்திருத்த இயக்கத்தின் பல்வேறு சமய போதனைகளை அச்சிட அச்சகம் உதவியது. மேலும் பொதுமக்கள் படிப்பறிவு பெற்றனர். பைபிளை படித்து புரிந்துகொள்ள மக்களுக்கு ஊக்கம் தரப்பட்டது. உள்ளூர் மொழியை போதனைகளுக்கு பயன்படுத்தியதும் பைபிளை வேறு வட்டார மொழிகளுக்கு மொழிமாற்றம் செய்ததும் சாதாரண மக்களைச் சென்றடைவதற்கான புதிய வழிகளைக் காட்டின.

இ) **பெண்களின் நிலை:** தேவாலயங்களில் பிரம்மச்சரியத்தை கடைபிடிப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதால் பிராட்டஸ்டன்ட் பாதிரியார்கள் திருமணம் செய்துகொண்டனர். இதனால் வீட்டிலும் தேவாலயங்களிலும் பெண்களின் நிலை வலுப்பெற்றது. பைபிளை படிக்குமாறு ஊக்கப்படுத்தப்பட்ட பெண்கள் பிராட்டஸ்டன்ட் வழிமுறையில் குழந்தைகளை வளர்க்கவும் ஊக்கம் பெற்றனர். இதனால் பெண்களின் கல்வியறிவு மேம்பட்டது.

ஈ) **அரசர்களின் அதிகாரம்:** எட்டாம் ஹென்றி போன்ற சில அரசர்களுக்கு, தேவாலயம் மற்றும் அரசு இரண்டுக்கும் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்த இந்த சீர்திருத்த இயக்கம் அதிக அதிகாரங்களை வழங்கியது.

உ) **காலனிகளுக்கான போட்டி:** கத்தோலிக்கர்களும் பிராட்டஸ்டன்ட்களும் உலகின் இதர பகுதிகளில் வாழும் மக்களை தத்தமது பிரிவுகளுக்கு மாற்றம் செய்ய விரும்பினார்கள். தென்அமெரிக்காவில் ஸ்பானிய வெற்றியை அடுத்து ஜெசூட் துறவிகள் (கத்தோலிக்க சமயத்தை பரப்ப உருவான ரோமன் கத்தோலிக்கர்களின் புதிய பிரிவு) பியூரிட்டன்கள், கத்தோலிக்கர்கள், ஆங்கிலிகன்கள் ஆகியோர் தத்தமது தேவாலயங்களை வடஅமெரிக்காவின் 13 ஆங்கிலேய காலனிகளில் அமைத்தனர்.

ஊ) **கிறித்தவ சமயத்தின் பரவல்:** காலனிகளில் தங்கம் மற்றும் வெள்ளி கிடைத்ததை அடுத்து ஐரோப்பிய நாடுகள் கடற்பயணிகளை உலகின் பல பகுதிகளுக்கு கிறித்தவ இயக்கத் தொண்டர்கள் என்ற போர்வையில் அனுப்பியது. 'முதலில் கிறித்தவத் தொண்டு, பிறகு துப்பாக்கிப்படகு அதனை அடுத்து நிலத்தை ஆக்கிரமிப்பு' என்ற வரிசையில் அடுத்தடுத்த தலைமுறையினர் கத்தோலிக்கர்களின் சீர்திருத்த தடுப்பு நடவடிக்கைகளை எதிர்கொள்ளவேண்டியிருந்தது.

## கத்தோலிக்க எதிர் சீர்திருத்தம்

### இயேசு சங்கம்


இக்னேஷியஸ் லயோலா

பிராட்டஸ்டன்ட் இயக்கத்தின்வளர்ச்சியை கத்தோலிக்க சமயம் எச்சரிக்கை உணர்வு மற்றும் கவலையோடு கவனித்தது. மார்ட்டின் லூதர் பிரபலம் அடைந்த வேளையில் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த இக்னேஷியஸ் லயோலா என்பவர் பாரிஸ் (பிரான்ஸ்) என்ற இடத்தில் புதிய தேவாலய முறைமையை 1534 ஆகஸ்டு 15இல்



12th_History_TM_Unit_10_V2.indd 33
24-09-2019 09:53:36

ஏற்படுத்தினார். பிரம்மச்சர்யம், வறுமை, கீழ்ப்படிதல் ஜெருசலேமுக்கு புனிதப் பயணம் மேற்கொள்வது ஆகிய உறுதிமொழிகளைக் கடைபிடிக்க அவரும் அவரது ஆறு பல்கலைக்கழக மாணவர்களும் உறுதியேற்றனர்.

அவரின் மாணாக்கர்களில் ஒருவரான பிரான்சிஸ் சேவியர் இந்தியா மற்றும் ஜப்பானுக்கான கிறித்தவ மிஷனரி தொண்டராக பின்னாளில் மாறினார். ரோமானிய தேவாலயத்திற்கும் போப்பாண்டவருக்கும் உண்மையாக தொண்டாற்ற சிறந்த மக்களை உருவாக்கப் பயிற்சி வழங்கவே இந்த அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. மக்களுக்கு கத்தோலிக்க சமயத்தைப் பயிற்றுவிக்க கல்வியை ஒரு சாதனமாக இந்த அமைப்பு பயன்படுத்தியது. கத்தோலிக்க சமயத்தை மேம்படுத்துவதற்காக அவர்கள் பல்வேறு கல்வி நிறுவனங்களை அமைத்தனர். இயேசு சங்கம் தேவாலயத்துக்கு உண்மையான சிறந்த தொண்டர்களை உருவாக்குவதில் வெற்றிபெற்றது. ஐரோப்பாவில் தேவாலயங்களின் தரத்தை உயர்த்த ஜெசூட்கள் என்று அழைக்கப்பட்ட இந்த பாதிரிமார்கள் உதவினார்கள்.

பிராட்டஸ்டன்ட் கிளர்ச்சியால் ஏற்பட்ட அச்சுறுத்தலை அடுத்து ரோமானிய தேவாலய நிர்வாகம் பின்பற்றிய நடவடிக்கைகளில் பெரும்பாலானவை தேவாலய நிர்வாகத்தின் தவறான வழிமுறைகளைக் களைதல், போப்பாண்டவரின் அதிகாரத்தை உறுதி செய்வது மற்றும் ஏழு திருவருட்சாதனங்கள் நம்பிக்கையை மீண்டும் ஏற்படுத்துவது (ஞானஸ்நானம், உறுதிபூசுதல், திருவிருந்து, பாவமன்னிப்பு, நோயில் பூசுதல், குருத்துவ துறவறம், திருமணம்) ஆகியனவாகும். எதிர் சீர்திருத்த இயக்கம் என்று இந்த இயக்கம் அழைக்கப்பட்டது. இதன் மூன்று முக்கிய நிகழ்வுகள் என்று குறிப்பிடவேண்டுமெனில், டிரென்ட் சபை, சமயவிசாரணை நீதிமன்றம் மற்றும் கத்தோலிக்க சமயத்தை பிரபலப்படுத்த புதிய சமயப்பள்ளிகளை நிறுவுவது என்பனவாகும்.

### டிரென்ட் சபை (1545–1563)

போப் மூன்றாம் பால் கத்தோலிக்க தேவாலய நிர்வாகத்தைச் சீர்திருத்த கார்டினல்கள் என்ற சமயத்தலைவர்களை நியமித்தார். டிரென்ட் சபை 18 ஆண்டுகளில் மூன்று முறை சந்தித்து பைபிள் மீதான நம்பிக்கையை வெளிப்படுத்தியது. தேவாலய போதனைகள் மற்றும் இரட்சிப்பை அடைவதற்கான ஏழு திருஅருட்சாதனங்களை பின்பற்றுவது குறித்தும் நம்பிக்கை வெளியிட்டது. போப்பாண்டவரின் வானளாவிய அதிகாரத்தை



டிரென்ட் சபை

உறுதி செய்வது, பாதிரிமார்களின் பிரம்மச்சர்யம் ஆகியன நிலைநிறுத்தப்பட்டன. தேவாலய பணிகளை விற்பது, வேண்டியவர்களுக்கு வேலை வழங்குவது, பிஷப்கள் தங்களின் கீழுள்ள தேவாலய அமைப்புக்களுக்கு செல்லாமல் இருப்பது போன்ற குறைகளை இந்த சபை களைந்தது. திருஅருட்சாதனங்களில் சொல்லப்பட்டுள்ள அறிவுறுத்தல் பற்றிய கல்வியறிவு பற்றியும் டிரென்ட் சபை வலியுறுத்தியது. அனைத்து தேவாலயங்களிலும் கிறிஸ்து மற்றும் மேரியின் உருவ வழிபாட்டையும் சபை ஆதரித்தது. இந்த டிரென்ட் சபையால் கத்தோலிக்க சமயம் நல்ல முறையில் ஒருங்கிணைக்கப்பட்டது.

### சமயவிசாரணை நீதிமன்றம் (Inquisition)

நீதிவிசாரணைக்கான சிறப்பு தேவாலய நீதிமன்றங்கள் நிறுவப்பட்டு சமயவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் தண்டனை பெற்றனர். சாட்டையடி தொடங்கி உயிருடன் எரிப்பது வரையான உத்திகளைக் கையாண்டு சமயவிரோதிகளை தனது தவறுகளை ஒப்புக்கொள்ள வைப்பது மற்றும் சமயவிரோதப் போக்கை கைவிடவைப்பது போன்றவை முக்கியமான வழிமுறைகளாகும். இது பிராட்டஸ்டன்ட்களை எதிர்கொள்ள ரோமானிய நீதிவிசாரணை அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. சூனியக்காரிகளை பிடித்து அழிப்பது பொது வழக்கமாக இருந்தது. விவாகரத்தான அல்லது தனித்து வாழும் பெண்கள் சூனியக்காரிகள் என அழைக்கப்பட்டதோடு அவர்களால் தான் பயிர் சாகுபடி இல்லை அல்லது நோய்கள் பரவின என்பன போன்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இத்தகைய பெண்கள் பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டனர். ஐரோப்பாவில் சுமார் 1 லட்சத்து 10 ஆயிரம் பேருக்கு எதிராக நீதிவிசாரணை நடந்ததாகவும் அவர்களில்



12th_History_TM_Unit_10_V2.indd 34 24-09-2019 09:53:37

60 ஆயிரம் பேர் விசாரணையின் முடிவில் கொல்லப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

### எதிர் சீர்திருத்த நடவடிக்கையின் விளைவுகள்

எதிர் சீர்திருத்த நடவடிக்கைகளின் விளைவாக, ஐரோப்பா சமய அடிப்படையில் பிரிக்கப்பட்டது. நாடுகளுக்குள்ளும், பல எண்ணிக்கையில் சமய நம்பிக்கை உடைய நாடுகளுடனும் போர்கள் மூண்டன. முப்பதாண்டுப் போரானது 1618 முதல் 1648ஆம் ஆண்டு வரை புனித ரோமானிய பேரரசின் பல்வேறு மாகாணங்களில் நடைபெற்றது இந்தப் பிரிவினைக்கு ஓர் உதாரணமாகும். பிராட்டஸ்டன்டுகளின் தேவாலயங்கள் கடுமையானவை; கத்தோலிக்க தேவாலயங்கள் மிகவும் அலங்காரமானவை. இரண்டு சமயக் குழுக்களும் தங்கள் சமய கருத்துகள் மற்றும் எண்ணங்களைப் பரப்பும் ஒரு சாதனமாக கல்வியைப் பயன்படுத்தின.

## 10.5 புதிய முடியாட்சிகளின் எழுச்சி / தேசிய அரசுகளின் தோற்றம்

நிலப்பிரபுத்துவ காலத்தில் மன்னர்கள் எதிரிகளுடனான போரின்போது ஆயுதங்களை வெடிபொருட்களைப் பெறுவது தொடர்பாக நிலப்பிரபுக்களுடன் ஒப்பந்தத்தை எட்டினார்கள். பதிலுக்கு அவர்களுக்கு அரசர்கள் வீரத்திருமகன் (knighthood) பட்டமும் வரிவசூல் இல்லாத நிலங்களையும் (fief) கொடுத்தார்கள். இத்தகைய பிரபுக்களுக்கு வரிவசூல் அற்ற நிலப்பகுதிகளை அரசர்கள் தங்களுக்கு ஆற்றிய சேவைகளுக்காக வழங்கினார்கள். இந்த உறவு இருதரப்புக்கும் உதவியாக அமைந்தது. மறுமலர்ச்சி மற்றும் சீர்திருத்த இயக்க காலத்தில் புதிய சக்திவாய்ந்த மன்னராட்சி அரசுகள் வலிமைபெற்றன. இந்தக்காலத்தில் பிரபுக்கள்–அரசர்கள் இடையே உறவு சரிவைச் சந்திக்கத் தொடங்கியது.

### காரணங்கள்

#### நிலப்பிரபுத்துவ முறை வீழ்ச்சி

இந்த முறையில் இடைக்கால அரசர்கள் பிரபுக்களின் தயவில் இருந்தார்கள். அரசரின் எதிரிகளுடன் எந்த நேரத்திலும் கைகோர்க்கும் வகையில் பிரபுக்கள் ஆயத்தமாக இருந்தனர். அரச குத்தகை நிலங்கள் மீது அரசர்களுக்கு எந்தக் கட்டுப்பாடும் இருக்கவில்லை. பிரபுக்கள் தங்களுக்குச் சொந்தமான நிலங்களை வைத்திருந்ததோடு தங்களைப் பாதுகாத்துக்கொள்ள ராணுவத்தையும் வைத்திருந்தனர். இம்முறையின் கீழ் அரசரின் நிலையும், அதிகாரமும் குறைந்தே காணப்பட்டது. இடைக்காலத்தில் ஐரோப்பாவைத் தாக்கிய கொள்ளை நோய் பிரபுத்துவ ஆட்சியை அதன் நடைமுறையை வலுவிழக்கச் செய்தது. பல்லாயிரக்கணக்கான விவசாயிகள், தொழிலாளர்கள் உயிரிழந்ததை அடுத்து பிரபுக்கள் தங்கள் வேலையாட்களை இழந்ததோடு வரிவருமானத்தையும் இழந்தனர். சிலுவைப்போர்களின்போது பெரும் எண்ணிக்கையில் பிரபுக்கள் உயிரிழந்தனர். புதிய மன்னராட்சியை உறுதிப்படுத்துவதில் நிலப்பிரபுத்துவ முறையின் வீழ்ச்சி முக்கியப் பங்காற்றியது.

வெடிமருந்து போன்ற போர்த்தொழில் நுட்பங்களின் பயன்பாடு மாற்றங்களைக் கொண்டுவந்தது. வீரத்திருமகன்களின் போர் உத்திகள் வலுவிழந்ததும் முப்பதாண்டுகாலப் போரின் போது முன்னரங்குக்கு வந்தது. வீரத்திருமகன்களைவிட ஆங்கிலேயர்களின் நீளமான வில்லும் வெடிமருந்தும் மிகப்பெரிய சேதத்தை ஏற்படுத்தியது.

#### தேவாலய நிர்வாகத்தின் புகழ் மங்குதல்

இடைக்காலத்தில் தேவாலயம் என்பது ஆதிக்கம் மிகுந்த நிறுவனமாக விளங்கியது. தனது கட்டுப்பாட்டின் கீழ் பல நிலப்பகுதிகளை அது கொண்டிருந்தது. மடாலயங்கள், கான்வென்ட் பள்ளிகள்,கட்டிடங்கள்ஆகியதேவாலயநிறுவனங்கள் அதிக அளவில் நிலப்பகுதிகளை கையகப்படுத்தின. இந்த நிலப்பகுதிகள் வரிவிலக்கு பெற்றிருந்தன. தேவாலய நிர்வாகம் தனது ஆளுகையின் கீழ் இருந்த மக்கள் மொத்த உற்பத்தியில் 10 சதவிகிதத்தை 'டைத்' வரியாக செலுத்த வேண்டும் என்று வரி விதித்தது. அரசை விட தேவாலய நிர்வாகம் வளம் கொழித்துக் காணப்பட்டது. தனது பொருளாதார மற்றும் சமய அதிகாரங்களைப் பயன்படுத்தி தேவாலய நிர்வாகம் அரசர்களைவிட அதிக முக்கியத்துவத்தைப் பெற்றது. தேவாலயம் தனக்கென்று தனி நீதித்துறையையும் வைத்திருந்தது. பிஷப்புகள், பாதிரியார்கள், கன்னியாஸ்திரிகள் போன்ற தேவாலய நிர்வாகிகள் தவறு செய்தால் அவர்களை தண்டிக்க தனி நீதிமன்றங்களும் அமைக்கப்பட்டன. அரச நீதிமன்றங்கள் இவர்களை தண்டிக்க முடியாது. இதனால் அரசர்களின் நீதிமன்றங்களுக்கு இருந்த அதிகாரத்தை விட இந்த தனி நீதிமன்றங்கள் அதிகாரம் அதிகம் பெற்றிருந்தன. இது மேலும் அரசர்களின் அதிகாரத்தைக் குறைத்தது. பிரபுக்கள் மற்றும் குடிமக்கள் முன்பாக அரசரை இழிவுபடுத்த அவரை கிறித்தவ சபைக் கூட்ட நடவடிக்கைகளில் இருந்து விலக்கிவைப்பது என்ற சக்திவாய்ந்த நடவடிக்கையை போப்பாண்டவர் மேற்கொண்டார்.



12th_History_TM_Unit_10_V2.indd 35 24-09-2019 09:53:37

தனது கட்டளைகளை மதித்து நடக்காத ஜெர்மனியின் ஆறாம் ஹென்றியை கிறித்தவ சபை நடவடிக்கைகளில் இருந்து விலக்கிவைத்து போப் ஏழாம் கிரிகோரி உத்தரவிட்டார். எனவே அரசர்கள் தேவாலய நிர்வாகத்துக்கு எதிரான நிலைப்பாட்டை எப்போதும் எடுக்கமுடியாத நிலை இருந்தது. ஆனால் கொள்ளை நோய்க்கான காரணங்களை தேவாலய நிர்வாகத்தால் விவரிக்க முடியாமல் போனதையடுத்து அதன் நிலை தாழ்ந்தது. போப்பாண்டவரின் அதிகாரம் குறித்து உயர் நிலையில் இருந்தவர்கள் அடிக்கடி கேள்வி எழுப்பினார்கள்.


போப் ஏழாம் கிரிகோரி

### ஸ்பெயின் தேசிய அரசாக உருவெடுத்தல்

அராபிய அரசர்களின் வழித்தோன்றல்களாகிய முஸ்லிம் மன்னர்களாகிய மூர்களின் கட்டுப்பாட்டில் ஸ்பெயினின் பெரும்பாலான பகுதிகள் இருந்தன. அராகன், காஸ்டைல் என இரண்டு முக்கிய அரசுகள் அங்கிருந்தன. ஸ்பெயின் நாட்டின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அராகன் அரசர் பெர்டினான்ட், காஸ்டைல் இளவரசி இசபெல்லாவை மணமுடித்தார். மூர்களை விரட்டி அடிக்க ஒன்றிணைந்து போராடிய அவர்கள் ஸ்பெயினை இணைக்கவும் கடினமாக உழைத்தனர். 1479இல் அரசரும் அரசியும் தங்கள் கைகளில் அதிகாரத்தை எடுத்தனர். மன்னர், சபையில் இருந்து பிரபுக்களை நீக்கியதன் மூலம் அவர்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தார். ஸ்பெயின் ஒரு தனி நாடாக உருவெடுத்தது.

ஸ்பெயினை ஒன்றாக இணைத்து ஆட்சி செய்த பெர்டினான்ட்–இசபெல்லா இருவரும் மிக ஆழமான பற்றுகொண்ட கத்தோலிக்கர்கள் ஆவர். மூர்களின் ஆட்சியில் ஸ்பெயினின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்திய யூதர்கள் பெரும் சுதந்திரத்தை அனுபவித்தனர். இப்போது மூர்களும் யூதர்களும் கிறித்தவ சமயத்தை தழுவுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். ஸ்பெயின் நாட்டின் நீதிவிசாரணை அமைப்பை அரசர் அமைத்தார். அதன் மூலம் மதம்மாறிய யூதர்களும் மூர்களும் தீவிரக் கண்காணிப்பில் வைக்கப்பட்டனர். சமய நம்பிக்கை அற்றவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு துன்புறுத்தப்பட்டு எரியூட்டப்பட்டனர். அரண்மனை தேவாலயத்தை விட அதிகாரம் அதிகம் பெற்றதாக விளங்கியது.

அமெரிக்காவுக்கான கடல்வழிப் பாதையை கொலம்பஸ் கண்டுபிடித்தது, இன்கா மற்றும் அஸ்டெக் அரசுகளை கைப்பற்றியது ஆகியன ஸ்பெயினின் வளம் அதிகரிக்க வழி செய்தது. இதனால் வளம்பெற்ற ஸ்பெயின் ஐரோப்பிய அரசியலில் முக்கியப் பங்காற்றத் தொடங்கியது.

### இங்கிலாந்து தேசிய அரசாக உருவெடுத்தல்

அரச சிம்மாசனத்தை அடைய யார்க் குடும்பம் மற்றும் லன்காஸ்டர் குடும்பம் என இரண்டு அரச குடும்பங்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டது. இதன் விளைவாக ரோஜாப்பூக்கள் போர் நடந்தது (அவர்கள் முறையே வெள்ளை மற்றும் சிவப்பு ரோஜாக்கள் உடைய அடையாளக்குறிகளை அணிந்தனர், அதனால் இப்பெயர் பெற்றது). இந்த உள்நாட்டுப்போரில் ஹென்றி டியூடர் வெற்றி வாகை சூடி, இங்கிலாந்தில் புதிய அரசராட்சி அமைய வழிவகுத்தார். ஏழாம் ஹென்றி என்று பட்டம் சூட்டிக்கொண்ட அவர் யார்க் குடும்பத்தைச் சேர்ந்த எலிசபெத் உடன் திருமண ஒப்பந்தத்தில் ஈடுபட்டார். இதனால் இங்கிலாந்து ஒரு தேசிய அரசாக உருவெடுத்தது.

தனது ஆட்சிக்கு பிரபுக்களால் ஏற்பட்ட அச்சுறுத்தலை நீக்க ஏழாம் ஹென்றி முடிவு செய்தார். பிரபுக்கள் தங்களுக்கு என தனி முத்திரை, சீருடை, பராமரிப்பு உடைய ராணுவங்களை வைத்திருந்தனர். மன்னரானவுடன் ஹென்றி இந்த வழக்கத்தை ஒழித்தார். வர்த்தக வகுப்பினர் மற்றும் சில சிறுபான்மை பிரபுக்களின் ஆதரவுடன் நாடாளுமன்றத்தில் சட்டங்களை இயற்றினார். கிளர்ச்சி செய்யும் பிரபுக்களை அரச சபையின் விசாரணைக்கு உட்படுத்த நட்சத்திர சேம்பர் என்ற சிறப்பு நீதிமன்றத்தை அவர் ஏற்படுத்தினார். பிரபுக்களிடம் இருந்து அரசாங்கம் அபராதப்பணம் வசூலித்ததை அடுத்து அரச வருமானம் அதிகரித்தது. வரி வசூலிக்கும் உரிமையையும் நாடாளுமன்றம் அரசருக்கு வழங்கியது. 1485 முதல் 1509ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்த ஏழாம் ஹென்றி அரசாங்கத்தின் மீது முழு கட்டுப்பாட்டையும் பெற்றார்.

தனது மூத்த மகளை ஸ்காட்லாந்து இளவரசருக்கு மணம் முடித்த அவர் ஸ்காட்லாந்து உடனான உறவுகளை பலப்படுத்தினார். அவர் தனது மகன் ஸ்பெயினின் இளவரசியை திருமணம் செய்து கொண்டதன் மூலம் ஸ்பெயினுடனும் திருமண உறவைப் பேணி வந்தார்.



12th_History_TM_Unit_10_V2.indd 36
24-09-2019 09:53:37

பிரபுக்களைப் பின்பற்றுவோருக்கு அடையாளக்குறிகள் மற்றும் சீருடை வழங்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. பிரபுக்களின் சொத்துக்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்க நட்சத்திர சேம்பர் என்ற பெயரில் நீதிமன்றத்தை ஏழாம் ஹென்றி உருவாக்கினார். நீதிமன்ற நடைமுறைகள் நடந்த வெஸ்ட்மினிஸ்டர் அரண்மனையின் மேல் சுவரில் நட்சத்திரங்கள் ஓவியமாக தீட்டப்பட்டிருந்ததால் இந்தப் பெயர்.

**பிரான்ஸ் தேசிய அரசாக உருவெடுத்தல்**

பிரான்சின் கிழக்கே உள்ள பர்கண்டி என்பது ஒரு சக்திவாய்ந்த நாடாகும். பெயரளவிற்கே பிரான்ஸ் அரசரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த கிளர்ச்சிமிகுந்த பகுதியான பர்கண்டியை ஆங்கிலேயர்கள் பிரான்சுக்கு எதிராக ஆக்கிரமித்தனர். பிரான்சின் வளமிக்க மேற்குப்பகுதிகளும் நீண்ட காலத்துக்கு ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் இருந்தது. பிரான்சை ஆண்ட வாலெசைய்ஸ் மரபு ஆங்கிலேயக் கட்டுப்பாட்டில் இருந்து பிரெஞ்சு பகுதிகளை மீட்கவும் வைத்திருக்கவும் போராடியது. பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கம் மற்றும் பதினைந்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை நீடித்த 100 ஆண்டுகள் போர் நடந்தது. இப்போர் நூறாண்டுப் போர் என்றழைக்கப்படுகிறது. இந்தப் போரில் பிரெஞ்சு அரசர் ஏழாம் சார்லசுக்காக ஜோன் ஆஃப் ஆர்க் என்ற பெயருடைய ஒரு இளம்பெண் வீரதீரமாகப் போரிட்டு ஆர்லியன்ஸ் போரை வென்றார். ஆர்லியன்ஸின் பணிப்பெண் (Maid of Orleans) என்ற பட்டம் ஜோன் ஆஃப் ஆர்க் மங்கைக்கு வழங்கப்பட்டது. எனினும் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்ட அவர், அசரீரி மூலம் வழிகாட்டப்பட்டதாக அவர் கூறியதற்காக நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டார். அவர் சூனியக்காரி என்று கண்டனம் செய்யப்பட்டு 1430இல் உயிருடன் எரிக்கப்பட்டார். (1920ஆம் ஆண்டு அவருக்கு கத்தோலிக்க திருச்சபை புனிதர் பட்டம் வழங்கியது).

ஜோன் ஆஃப் ஆர்க்கின் மறைவுக்குப் பிறகு நூறாண்டுகள் போரைத் தொடர்ந்த பிரெஞ்சு அரசு அதில் வெற்றி பெற்றது. ஆங்கிலேயர்களை நாட்டை விட்டு விரட்டிய பிறகு, ஏழாம் சார்லஸின் மகன் பதினோறாம் லூயி பர்கண்டி திரும்பினார். கிளர்ச்சி மிகுந்த இந்தப் பகுதி இறுதியாக 1483ஆம் ஆண்டு பிரான்சின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. பிரான்ஸ் ஒரு வலுவான மத்திய மன்னராட்சி நடைபெறும் அரசாக உருவெடுத்தது. பதினோறாம் லூயி பிரான்சை வலுப்படுத்தி ஒன்றுபடுத்தினார். முதன்முறையாக பிரான்ஸ் வரலாற்றில் அரசரின் கீழ் பிரபுக்களை சார்ந்திருக்காமல் ஒரு நிரந்தர ராணுவம் உருவாக்கப்பட்டது. அவரது அரச சபையில் பிரபுக்களை விட வழக்குரைஞர்கள் அதிகம் இருந்தனர். இதனால் அரச நடவடிக்கைகளில் பிரபுக்களின் ஆளுமை குறைந்தது.



பதினோறாம் லூயி

## பாடச் சுருக்கம்

- இத்தாலிய மறுமலர்ச்சி மற்றும் மேற்கத்திய ஐரோப்பாவுக்கான அதன் பரவல் விவாதிக்கப்பட்டது.
- மறுமலர்ச்சிகால முக்கிய அறிஞர்கள், கலைஞர்கள் மற்றும் விஞ்ஞானிகளின் சிறப்பு குறிப்புகளுடன் இலக்கியம், கலை மற்றும் அறிவியலில் ஏற்பட்ட மறுமலர்ச்சி பற்றி விவரிக்கப்பட்டுள்ளது.
- பதினைந்தாம் மற்றும் பதினாறாம் நூற்றாண்டின் புவியியல் கண்டுபிடிப்புகளுக்கு காரணமான காரணிகள் குறித்து ஆராயப்பட்டது.
- போர்த்துகல் மற்றும் ஸ்பெயின் நாடுகளின் முக்கியப் பணி எடுத்துரைக்கப்பட்டது.
- கடல் பயணங்களில் இதர ஐரோப்பிய நாடுகளின் முயற்சிகளும் விவரிக்கப்பட்டன.
- வர்த்தகப் புரட்சியும் அதன் வீழ்ச்சியும் விளக்கப்பட்டன.
- சீர்திருத்த இயக்கத்தின் காரணங்கள் ஆராயப்பட்டன.
- மார்ட்டின் லூதர், ஸ்விங்கிளி, கால்வின் ஆகியோரின் பங்களிப்பு ஆங்கிலேய சீர்திருத்த இயக்கத்தின் பிரத்யேக இயல்பில் கவனம் செலுத்தி ஆராயப்பட்டது.
- கத்தோலிக்க திருச்சபையின் எதிர்–சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் அதன் தாக்கங்கள் விவரிக்கப்பட்டன.
- மேற்கு ஐரோப்பாவில் புதிய முடியாட்சிகளின் எழுச்சிக்கு வழிவகுத்த சூழ்நிலைகள் ஆராயப்பட்டன.
- ஸ்பெயின், இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகியவை தேசிய அரசுகளாக உருவானது பற்றி விவரிக்கப்பட்டது.

## பயிற்சி

W6C7Z1

### I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. கீழ்க்கண்டவற்றில் எது சுதந்திரமான வர்த்தக நகரம் இல்லை?

   (அ) நூரெம்பெர்க் (ஆ) ஆன்ட்வெர்ப்

   (இ) ஜெனோவா (ஈ) செயின்ட் பீட்டர்ஸ்பர்க்

2. கீழ்க்கண்டவற்றில் எது சமயத்தை இரண்டாம் நிலைக்கு தள்ளியது?

   (அ) மறுமலர்ச்சி

   (ஆ) சமயச் சீர்திருத்தம்

   (இ) புவியியல் கண்டுபிடிப்பு

   (ஈ) வர்த்தகப் புரட்சி

3. கீழ்க்கண்ட போப்பாண்டவர்களில் இத்தாலிய மறுமலர்ச்சிக்கு ஆதரவாகச் செயல்படாதவர் யார்?

   (அ) ஐந்தாம் நிக்கோலஸ்

   (ஆ) இரண்டாம் ஜூலியஸ்

   (இ) இரண்டாம் பயஸ்

   (ஈ) மூன்றாம் பால்

4. வெளிநாட்டு நிறுவனங்களுக்கு எவருடைய வெற்றி பெரிதும் ஊக்கம் தந்தது?

   (அ) மார்க்கோ போலோ

   (ஆ) ரோஜர் பேக்கன்

   (இ) கொலம்பஸ்

   (ஈ) பார்தோலோமியோ டயஸ்

5. **கூற்று:** காகிதம் கி.மு (பொ.ஆ.மு) இரண்டாம் நூற்றாண்டில் சீனாவில் தோன்றியது.

   **காரணம்:** நகரும் அமைப்பிலான அச்சு இயந்திரத்தை ஜெர்மனி கண்டுபிடித்தது.

   (அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

   (ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

   (இ) கூற்று சரி. காரணம் தவறு

   (ஈ) கூற்று தவறு. காரணம் சரி

6. பின்வருவனவற்றில் எது மறுமலர்ச்சி காலத்தில் உருவாக்கப்பட்ட ஒரு யோசனை அல்ல?

   (அ) பகுத்தறிவுவாதம் (ஆ) ஐயுறவுவாதம்

   (இ) அரசில்லா நிலை (ஈ) தனித்துவம்

7. நவீன செயல்முறை அறிவியலின் தந்தை எனக் கருதப்படுபவர் யார்?

   (அ) அரிஸ்டாட்டில் (ஆ) பிளாட்டோ

   (இ) ரோஜர் பேக்கன் (ஈ) லாண்ட்ஸ்டெய்னர்

8. மனிதகுலத்தை சமயமரபு அல்லது அதிகாரம் மூலமாக ஆட்சி செலுத்தாமல் காரணங்கள் மூலம் ஆட்சி செலுத்தவேண்டும் என்று விரும்பியவர் யார்?

   (அ) தாந்தே (ஆ) மாக்கியவல்லி

   (இ) ரோஜர் பேக்கன் (ஈ) பெட்ரார்க்

9. துருக்கியர்களுக்கு எதிரான போரில் மேற்கத்திய நாடுகளின் உதவியை நாடி இத்தாலிக்கு சென்றவர் யார்?

   (அ) ஜியோவனி அவுரிஸ்பா

   (ஆ) மேனுவல் கிரைசாலொரஸ்

   (இ) ரோஜர் பேக்கன்

   (ஈ) கொலம்பஸ்

10. **கூற்று:** கலிலியோ கலிலி தேவாலய விரோத போக்குக்காக கிறித்தவ திருச்சபையால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

    **காரணம்:** சூரியனை மையமாக வைத்து கோள்கள் சுற்றுகின்றன என்ற கோபர்நிகஸின் சூரியமையக் கோட்பாட்டை அவர் ஏற்றார்.

    (அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

    (ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

    (இ) கூற்று சரி. காரணம் தவறு

    (ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

11. கீழ்க்கண்டவற்றில் எது சரியான அறிக்கை அல்லது அறிக்கைகள்?

    அறிக்கை I: இத்தாலியர்கள் தாங்கள் பண்டைய வைக்கிங்கின் வழித்தோன்றல்கள் என்ற நம்பிக்கையை பாதுகாக்க முயன்றனர்.

    அறிக்கை II: துப்பாக்கிகள் மற்றும் வெடிமருந்து மூலமாக கடல் பயண ஆபத்துகள் குறைக்கப்பட்டன.

    அறிக்கை III: கிறித்தவ சமயத்தைப் பரப்பும் ஆர்வம் புதிய நிலப்பகுதிகளை கண்டுபிடிப்பதில் ஊக்கம் தந்தது.

    அறிக்கை IV: பெர்டினான்ட் மெகல்லன் மேற்குநோக்கிப் பயணித்து பிரேசிலைக் கண்டுபிடித்தார்.

    (அ) I, II மற்றும் III (ஆ) II மற்றும் III

    (இ) I மற்றும் III (ஈ) அனைத்தும் சரி



12th_History_TM_Unit_10_V2.indd 38 24-09-2019 09:53:38

12. கீழ்க்கண்டவற்றில் எது லியானர்டோ டாவின்சியின் ஓவியம் இல்லை?

(அ) வர்ஜின் ஆஃப் ராக்ஸ்

(ஆ) இறுதி விருந்து

(இ) மோனலிசா

(ஈ) மடோனாவும் குழந்தையும்

13. போப்பாண்டவரால் கட்டப்பட்ட ரோமில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தை நவீனமயமாக்கியவர் யார்?

(அ) டோனடெல்லா

(ஆ) ரபேல்

(இ) லியானர்டோ டாவின்சி

(ஈ) மைக்கேல் ஆஞ்சிலோ

14. கீழ்க்கண்டவற்றில் எது சரியாக பொருத்தப்படவில்லை?

(அ) மார்லோவ் – டிடோ

(ஆ) ஷேக்ஸ்பியர் – கிங் லியர்

(இ) பிரான்சிஸ் பேக்கன் – நோவும் ஆர்கனும்

(ஈ) ரோஜர் பேக்கன் – டெக்கமரான்

15. **கூற்று:** துருக்கிய வெற்றிகளும் கான்ஸ்டான்டிநோபிளின் வீழ்ச்சியும் கிழக்குப் பகுதிக்கு ஒரு கடல் வழித்தடத்தை கண்டுபிடிக்க ஊக்கமாக இருந்தது.

**காரணம்:** கிழக்கில் இருந்து கிடைக்கும் பொருட்களின் தேவைகள் அதிகரித்ததால் கடல்வழி வாணிபத்தை கட்டுப்படுத்த ஐரோப்பிய நாடுகள் விரும்பின.

(அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

(ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

(இ) கூற்று சரி காரணம் தவறு

(ஈ) கூற்று தவறு காரணம் சரி.

16. மெகல்லனின் மறைவுக்குப் பிறகு எந்தக் கப்பல் திரும்பியது?

(அ) சாண்டா மரியா (ஆ) பிண்ட்டா

(இ) நினா (ஈ) விட்டோரியா

17. ஸ்பெயினுக்காக மெக்சிகோவைக் கைப்பற்றியவர் யார்?

(அ) பெட்ரோ காப்ரல் (ஆ) கொலம்பஸ்

(இ) ஹெர்னன் கார்ட்ஸ் (ஈ) ஜேம்ஸ் குக்

18. இங்கிலாந்தில் எட்டாம் ஹென்றியால் மேலாதிக்கச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு எது?

(அ) 1519 (ஆ) 1532 (இ) 1533 (ஈ) 1534

19. **கூற்று:** கொள்ளை நோய்க்கான காரணங்களை விளக்க முடியாததால் கொள்ளை நோய் தேவாலயத்தின் நிலையை பலவீனப்படுத்தியது

**காரணம் :** போப்பாண்டவரின் அதிகாரம் பெரும் சவால்களை எதிர்கொண்டது.

(அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

(ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

(இ) கூற்று சரி காரணம் தவறு

(ஈ) கூற்று தவறு காரணம் சரி.

20. ஏழாம் கிரிகோரியால் கத்தோலிக்க திருச்சபை நடவடிக்கைகளில் இருந்து விலக்கி வைக்கப்பட்ட ஆட்சியாளர் யார்?

(அ) ஏழாம் ஹென்றி

(ஆ) எட்டாம் ஹென்றி

(இ) இரண்டாம் ஹென்றி

(ஈ) நான்காம் ஹென்றி

## II. சுருக்கமான விடையளிக்கவும்.

1. கிறித்தவ சீர்திருத்த இயக்கத்துக்கு எராஸ்மஸ் எவ்வாறு வழியமைத்தார்?
2. பிளாரன்ஸின் மெடிசி குடும்பம் பற்றி குறிப்பு வரைக.
3. 1493ஆம் ஆண்டின் போப்பின் ஆணை பற்றி நீவிர் அறிந்ததென்ன?
4. ஸ்பெயின் நாட்டு கப்பற்படையின் குறிப்பிடத்தகுந்த விளைவு என்ன?
5. வோர்ம்ஸ் சபையின் வெளிப்பாடு என்ன என்று தெரிவிக்கவும்.
6. நட்சத்திர சேம்பர் உருவாக்கப்பட்டதன் நோக்கம் என்ன? அது ஏன் அவ்வாறு அழைக்கப்பட்டது?
7. இடைக்காலத்தின் பிற்பகுதியில் நிலப்பிரபுத்துவ நடைமுறை ஏன் தோல்வி கண்டது?
8. ரொட்டியும் திராட்சை ரசமும் உண்பது இயேசுவின் சதையும் இரத்தமும் உண்பதற்கு சமம் என்ற சமயச் சடங்கு தான் என்பதை விளக்குக.
9. ஸ்பெயினில் சமயவிசாரணை நீதிமன்ற அமைப்பு என்ன செய்தது?
10. யார்க் மற்றும் லான்காஸ்டிரியன் குடும்பங்களுக்கு இடையேயான மோதல் ஏன் ரோஜாப்பூ போர் என்று அழைக்கப்பட்டது? இந்தப் போர் எவ்வாறு முடிவுக்கு வந்தது?
11. டிரென்ட் சபையின் பணி என்ன என்று எடுத்துரைக்கவும்.
12. வரலாற்றில் ஜோன் ஆஃப் ஆர்க் மங்கையினை நினைவு கூறப்படுவது ஏன்?



12th_History_TM_Unit_10_V2.indd 39 24-09-2019 09:53:38

### III. குறுகிய விடையளிக்கவும்.

1. மறுமலர்ச்சியின் தாயகமாக இத்தாலி விளங்கியது ஏன்?
2. மறுமலர்ச்சி காலத்தில் இங்கிலாந்தில் ஏற்பட்ட இலக்கிய சாதனைகளை குறிப்பிடவும்.
3. இத்தாலிய மற்றும் ஆங்கிலேய கடல்பயணிகளின் சாதனைகள் என்ன?
4. வர்த்தகப் புரட்சியின் எதிர்மறை விளைவுகள் என்ன?
5. ஜெனோவாவில் பிராட்டஸ்டன்ட் இயக்கத்தை ஒருங்கிணைப்பதில் ஜான் கால்வின் ஆற்றிய பங்கை ஆராய்க.
6. ஐரோப்பாவில் எதிர்சீர்திருத்த இயக்கத்துக்கு இயேசு சபையின் பங்களிப்பு பற்றி விவாதிக்கவும்.
7. 1492இல் கொலம்பஸ் மேற்கொண்ட பயணம் பற்றி குறிப்பு வரைக.
8. போர்த்துகீசிய கடல்பயணி பெட்ரோ காப்ரல் இந்தியாவுக்கு மேற்கொண்ட பயணம் பற்றி குறிப்பிடுக.

### IV. விரிவான விடையளிக்கவும்.

1. இத்தாலிய மறுமலர்ச்சிக்கு பிளாரன்ஸ் நகர மக்கள் ஆற்றிய பங்களிப்பை ஆராயவும்.
2. இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின் ஆகியவை தேசிய அரசுகளாக உருவெடுத்தமை பற்றி ஒருங்கிணைந்த முறையில் ஆராயவும்.
3. கிழக்குப் பகுதிக்கு புதிய கடல் வழித்தடங்களை கண்டுபிடிப்பதில் போர்த்துகல் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளின் முன்முயற்சிகளை விவரிக்கவும். நவீன உலகின் பொருளாதார வரலாற்றில் ஏன் இது மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக கருதப்படுகிறது?
4. பிராட்டஸ்டன்ட் சீர்திருத்த இயக்கத்துக்கான காரணங்கள் யாவை? ஜெர்மனியில் மார்ட்டின் லூதர் இந்த இயக்கத்தை எவ்வாறு ஒருங்கிணைத்தார்?

### V. செயல்பாடுகள்.

1. பகுத்தறிவின் காலம் பற்றிய பொருள் மற்றும் முக்கியத்துவம் பற்றி ஆசிரியர்கள் மாணவர்களுடன் விவாதிக்க வேண்டும்.
2. உலக புறஎல்லை வரைபடத்தில் கொலம்பஸ், வாஸ்கோடகாமா, மெகல்லன் ஆகியோர் சென்ற கடல்வழித்தடங்களைக் குறிக்கவும்.
3. மறுமலர்ச்சி தொடர்பான வீடியோ பதிவுகளை மாணவர்கள் இணையத்தில் காணலாம்.
4. வட மற்றும் தென் அமெரிக்காவின் பூர்வகுடிகள் மீது ஐரோப்பியர்கள் நடத்திய இனப்படுகொலை குறித்த திரைப்படங்கள்/வீடியோ பதிவுகளை மாணவர்கள் காணலாம்.

## மேற்கோள் நூல்கள்


- Peter Burke. *The Italian Renaissance.* Cambridge: Polity Press, 2010.
- Cameron Euan. *Early Modern Europe.* Oxford: Oxford University Press, 2001.
- E. H. Gombrich. *A Little History of the World.* London: Yale University Press, 2008.
- Stephen J.Lee *Aspects of European History 1494–1789.* London: Routledge, 1978.
- Edward McNall Burns, *Western Civilizations*, Vol. 2, New York: W.W. Norton, 1973.


## மேலும் வாசிக்கத்தகுந்த நூல்


- நா. பக்தவத்சலு, புகுமுக வகுப்பு உலக வரலாறு. (கி.பி. 15ஆம் நூற்றாண்டிலிருந்து), தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை (ஆவணப் பதிப்பு: ஆகஸ்ட் – 2017).


## இணையதள வளங்கள்

- https://www.history.com/topics/reformation/martin-luther-and-the-95-theses
- http://www.newworldencyclopedia.org/entry/John_Calvin
- http://www.bbc.co.uk/history/british/tudors/english_reformation_01.shtml kids.britannica
- http://www.vcsd.k12.ny.us/cms/lib/NY24000141/Centricity/Domain/941/Impact%20of%20the%20Reformation%202.ppt
- https://www.coreknowledge.org/wp-content/uploads/2017/03/CKHG-G5-U5-about-the-counter-reformation.pdf




12th_History_TM_Unit_10_V2.indd 40 24-09-2019 09:53:38

## A-Z கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| சமய நம்பிக்கையின்மை, எதிலும் அவநம்பிக்கையாக இருத்தல் | **scepticism** | doubt about the truth of something, disbelief |
| வெறுப்புத் தருகிற, தொந்தரவூட்டுகிற | **irksome** | irritating, teasing |
| பகைத்துக்கொள்வது, விரோதமூட்டுவது | **antagonise** | act in opposition to, counteract |
| போலந்து நாட்டையோ, அதன் மக்களையோ, அதன் மொழியையோ குறிப்பிடுவது | **polish** | relating to Poland or its people or its language |
| மதங்களுக்கெதிரான கொள்கை | **heresy** | a belief that rejects the orthodox tenets of a religion |
| அறிவனைத்தும் அனுபவத்தால் பெறப்படுபவையே எனும் கோட்பாடு | **empiricism** | the doctrine that holds that the most reliable source of knowledge is from experience or experimentation |
| வரையறை, எல்லைப் பிரிவினை | **demarcation** | dividing line |
| பதிலடி கொடு, பழிவாங்கு | **retaliate** | revenge, avenge |
| ஒருவரிடத்தில் மற்றொருவரை அமர்த்து, தள்ளி வை | **supercede** | replace, take the place of |
| இலாபகரமான, ஆதாயமளிக்கிற | **lucrative** | producing a sizeable profit, money spinning |
| ஒப்புக்கொள்ள மறு, பொறுப்பைத் தட்டிக்கழி | **disavow** | refuse to acknowledge |
| பறிமுதல் | **confiscation** | seizure of property |
| (திருச்சபை) உட்பிளவு, பிரிவினைக் குழு | **schism** | a division, split |
| சமரசப்படுத்துதல், ஒத்துப்போதல் | **reconciliation** | restoring friendly relations |
| பின்பற்றுதல், கடைப்பிடித்தல் | **adherence** | faithfully following a party or religion |
| மறை மாவட்டம் | **diocese** | the territorial jurisdiction of a bishop |
| சமயத்துறை வினாவிடை ஏடு | **catechism** | religious instruction in question and answer form |
| திரும்பப்பெறல் | **recantation** | withdrawal of an early assertion |
| நீதி விசாரணை | **inquisition** | interrogation, cross-examination |
| கிறித்தவ திருச்சபை சார்ந்த | **ecclesiastical** | associated with church |
| கொந்தளிப்பான, கிளர்ந்தெழுகிற | **turbulent** | characterised by unrest, troubled |



12th_History_TM_Unit_10_V2.indd 41 24-09-2019 09:53:38

## இணையச் செயல்பாடு

### நவீன உலகம்: பகுத்தறிவின் காலம்

**இந்த செயல்பாட்டின் மூலம் உலக நாடுகளில் உள்ள கலை மற்றும் ஓவிய வரலாற்றை படவிளக்கத்துடன் தெரிந்து கொள்ள முடியும்.**




**படிநிலைகள்**


படி – 1 : URL அல்லது QR குறியீட்டினைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப்பக்கத்திற்கு செல்க

படி – 2 : தோன்றும் உலக வரைபடத்தில் எதாவது ஒரு இடத்தை தேர்ந்தெடுக்கவும் (உதாரணம்: ஐரோப்பா), பின்னர் இடது பக்க மெனுவில் தோன்றும் காலவரிசையை எதாவது ஒன்றை சொடுக்கவும் (உதாரணம்: கி.பி.1400–1600)


படி –3 : மறுமலர்ச்சி கால கலை மற்றும் ஓவியங்களை காண பக்கத்தின் கீழே சுழற்றவும்.




படி 1




படி 2




படி 3

**உரலி:** https://www.metmuseum.org/toah/chronology/

QR GUIDE

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

*தேவையெனில் Adobe Flash ஐ அனுமதிக்க.